# கிறிஸ்தவம்

# தரம்

# 7

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2015
இரண்டாம் பதிப்பு - 2016
மூன்றாம் பதிப்பு - 2017
நான்காம் பதிப்பு - 2018
ஐந்தாம் பதிப்பு - 2019

*முழுப் பதிப்புரிமையுடையது.*

ISBN 978-955-25-0094-7

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 506, நாவின்ன, ஹைலேவெல் வீதி, மகரகம,
தரங்ஜி பிரின்ட்ஸ்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.*

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்**

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்**

**ஆர். டீ. விஜேவிக்ரம**
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**அ. ஞானேஸ்வரன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**ஆலோசனை**

**அருட்பணி. டப்ளிவ். பீ.எபனேசர் ஜோசப்**
பொது செயலாளர்
தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு.

**பதிப்பாசிரியர் குழு**

**அருட்பணி. சி. டப்ளிவ். சி. பால்ராஜ்**
அதிபர்
பரி. தோமஸ் கல்லூரி, பண்டாரவளை.

**அருட்பணி. ஜெயநாத் பண்டிதரத்ன**
கிறிஸ்தவ கல்வி மன்றம்
தேசிய கிறிஸ்தவ மன்றம்
கொழும்பு.

**அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது**
செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்
தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு.

**எழுத்தாளர் குழு**

**டி. குளோரி எப்சிபா**
ஆசிரியர்
கம்பளை இந்து கல்லூரி, கம்பளை.

**என். பி. செல்வநிதி பெரேரா**
ஆசிரியர் (ஓய்வு பெற்ற)

**நிலந்தி தீபா டி சில்வா**
ஆசிரியர்
மெதடிஸ்த உயர் கல்லூரி
புவக் அரம்ப, மொரட்டுவ.

**எம். ரதீகா சமந்தி மென்டிஸ்**
ஆசிரியர்
தூய தோமையர் கல்லூரி
கல்கிசை.

**அருட்பணி.ஜெ.சி.எஸ். ரோகித டி சில்வா**
ஆசிரியர்
வெஸ்லி கல்லூரி, கொழும்பு.

**நிலூகா ஷாமினி உடுமுள்ள**
ஆசிரியர் கிங்ஸ்வூட் கல்லூரி
கண்டி

## மொழிப் பதிப்பாசிரியர்

**ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை

## சரவை பார்ப்பு

**க. மகாவலிராயன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய.

## கணினி வடிவமைப்பு

**பரமநாதன் உஷாநந்தனி**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எம்மைப் பாதுகாக்கும் படைப்பாளர் | 1 |
| 2. | படைப்பை நாம் பாதுகாப்போம் | 6 |
| 3. | இறைபடைப்பின் நிலையான தன்மை | 10 |
| 4. | மாறா அன்பு நிறைந்த இறைவன் | 14 |
| 5. | தூதுப் பணியின் செயற்பாடு | 18 |
| 6. | சோதனையில் வெற்றி | 24 |
| 7. | மலைப்பொழிவில் வாழ்வு வளமடைதல் | 29 |
| 8. | இறைவிருப்பத்தை நிறைவேற்றுவோம் | 34 |
| 9. | சிலுவை மொழிகளின் முன்மாதிரி | 40 |
| 10. | எல்லோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு | 44 |
| 11. | தூய ஆவியில் புத்தொளி | 47 |
| 12. | ஆரம்பக் கிறிஸ்தவ சபை | 52 |
| 13. | குணமளிக்கும் இறைவன் | 55 |
| 14. | இறைவார்த்தையைப் பின்பற்றுவோம் | 58 |
| 15. | திறமைகள் இறை மகிமைக்காக | 65 |
| 16. | அனைவரையும் ஏற்றுக் கொள்வோம் | 70 |
| 17. | ஆபத்துக்களில் கருணை செய்வோம் | 75 |
| 18. | திருவிவிலியத்தின் மூல உருவாக்கம் | 79 |
| 19. | வேதாமகத்தோடு தொடர்புடைய முன்னோடிகள் | 86 |
| 20. | திருவிவிலிய மொழிபெயர்ப்பு | 92 |
| 21. | சக வாழ்வு வாழ்வோம் | 97 |

# 1. எம்மைப் பாதுகாக்கும் படைப்பாளர்

இறை படைப்பில் முதலிடம் மனிதனுக்கே உரித்தானது விசேடமாக சிறு பிள்ளைகளான உங்களின் வாழ்வு இறைதந்தையின் முன்னால் விசேடமானது. எனவே இதைப்பற்றி கற்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

**தொடக்கநூல்-2:7-8 மத்தேயு-6:25-34, மத்தேயு 18.6**

**''ஆண்டவராகிய கடவுள்கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்''**
**தொடக்கநூல் - 2:8**

## ஏதேன் தோட்டம்

இறைதந்தை பூமியின் மண்ணால் மனிதனை உருவாக்கி உயிர் மூச்சை ஊதி மனிதனுக்கு உயிர் கொடுத்தார். இதனால் படைப்பிலே மனிதனுக்கு முதலிடம் கிடைத்தது. அவ்வாறே இறைவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் குடியிருக்கச் செய்தார் என்பதை திருவிவிலியத்தில் நாம் காண்கிறோம். இறைவன் ஏதேன் தோட்டத்தில் மனிதன் வாழ்வதற்குத் தேவையான பாதுகாப்பான சூழலைப் பெற்றுக் கொடுத்தார். அதுமட்டுமல்லாமல் அவர் ஏதேனைப் பாதுகாக்கும் பொறுப்பை மனிதனிடம் ஒப்படைத்தார்.

## படைப்பினூடாக இறை பாராமரிப்பு



**வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை;
அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை; உங்கள் விண்ணகத்தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார்.
அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா?**
**மத்தேயு-6:26.**

வானத்தில் சுதந்திரமாகப் பறந்து திரியும் பறவைகளைப் பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள். இப் பறவைகளின் வாழ்வு எவ்வளவு சுதந்திரமானது. இவ்வாறு பறக்கும் பறவைகளைக்கூட இறைவன் பரா மரித்து போஷிக்கின்றார் என்பதை மேலே உள்ள திருவிவிலியவசனம் தெளிவுபடுத்துகின்றது. அப்படியாயின் படைப்பில் முதலிடம் வகிக்கும் மனிதனின் வாழ்வையும் இறைவன் பாதுகாத்துப் பராமரிப்பார். எனவே தேவையற்றவைகளைக் குறித்து நாம் கவலைப்படாமல் இருப்பது அவசியமாகும்.''எதை உண்பது''? என வாழ்விற்கும், ''எதை அணிவது''? என உடலுக்கும் நாம் கவலைப்படக்கூடாது என இயேசு காண்பித்துள்ளார்

எனவே இறைவன் மேல் நம்பிக்கை கொண்டு வாழ்வது அவசியமாகும் என்பதை இதன் மூலம் நாம் அறிகின்றோம். இறைவனிடம் நாம் நம்பிக்கை கொள்கிறோம். ஏனெனில் எம் தேவைகள் என்னவென்று நாம் கேட்பதற்கு முன்னமே அவர் அறிந்திருக்கிறார். நாம் அநேகமாக எமது வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வேண்டிய காரியங்களை அல்லாமல் வேறு வேறு காரியங்களை இறைவனிடம் கேட்கின்றோம்.

எனவே நாம் எப்போதும் பிரச்சனைகளோடு மனம் நொந்து கவலைப் படுவது நல்லதல்ல. இறைவன் அவரின் படைப்புகளை எப்போதும் பாதுகாத்து பராமரிக்கின்றார். ஆகவே அவர் எம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? நாம் தேட வேண்டியது என்ன?

**அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியும்**
**அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்**
**அப்போது இவை அனைத்தும் உங்களுக்குச்**
**சேர்த்துக் கொடுக்கப்படும்.**
**(மத்தேயு-6:33)**

முதலாவது இறைவனோடு தொடர்பு கொள்வது அவசியமாகும். அவரின் அரசைச் சேர்ந்த பிள்ளைகளாக வாழ்வதை அவர் எதிர்பார்க்கின்றார். அவருக்குச் சொந்தமான பிள்ளைகளின் வாழ்வில் காணப்படவேண்டிய இறைபண்புகளோடு வாழ்வது அவசியமாகும்.

எனவே நாம் இறைவனில் விசுவாசம் கொண்டு அவருக்கு உரிய பிள்ளைகளாக வாழும் போது எமது வாழ்வின் தேவைகளை அவர் சரியான முறையில் எமக்கு அருளுவார்.

## இறைபடைப்பினூடாக பிள்ளைகளின் பராமரிப்பு

இறைபடைப்பினூடாக பிள்ளைகளின் வாழ்வின் பாதுகாப்பான தன்மை தெளிவாகின்றது.



**''என் மீது நம்பிக்கை கொண்டுள்ள இச் சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது''**

**மத்தேயு-18:6**

இயேசு பிள்ளைகளின் வாழ்வின் அலங்காரத்தையும் பெறுமதியையும் முக்கியமானதாகக் கருதினார். எனவே பிள்ளைகளின் பாதுகாப்பானது பெரியோர்களின் மேலதிகமான பொறுப்பாக அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்பித்தார். சமுதாயத்தின் தவறுகளால் அதன் பிரதிபலன் பிள்ளைகளிடம் வரும்போது இறைவன் கோபம் கொள்கிறார் என்பதைத் தெளிவாகக் காண்கிறோம்.

## இன்று சமுதாயத்தில் பிள்ளைகளுக்கு ஏற்படும் துன்பங்கள்

★ பலவித சூழல் அனர்த்தங்களால் அனாதைகளாதல் (வெள்ளம், வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, நிலநடுக்கம், சூறாவளி, வரட்சி)

★ ஏழைகளானபடியால் வீதிகளில் வீசப்பட்ட குழந்தைகள்

★ பலவிதமான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சிறுவர்கள்.

★ பெற்றோர்கள் வெளிநாட்டில் தங்கி இருப்பதால் பாதிக்கப்படும் பிள்ளைகள்.

★ சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்.

★ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்.

★ பெற்றோர்கள் பிரிந்து செல்வதால் கைவிடப்பட்ட சிறுவர்கள்.

★ மது போதைகளுக்குப் பழக்கப்பட்ட சிறுவர்கள்

★ பலவித குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பிள்ளைகள்

இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பலவிதமான நிறுவனங்கள் பங்களிக்கின்றன. அவ்வாறான நிறுவனங்கள் பலவற்றைக் கீழே காணலாம்.

★ சிறுவர், பெண்களுக்கான அமைச்சு

★ சிறுவர், பெண்களுக்கான இலங்கை காவற்துறை

★ சிறுவர் நன்னடத்தைப் பாதுகாப்பு திணைக்களம்

★ ஐக்கிய நாட்டுச்சபையின் பிள்ளைகளுக்கான பாதுகாப்பு நிதியம்

★ அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள்.

சிறுவர் பாதுகாப்பு நலன்களுக்கான தொலைபேசி இலக்கம் (1929)

சிறுபராயத்தில் குற்றச் செயல்களுக்குள்ளாகும் சிறார்களுக்கு நீதிமன்றத்தின் கட்டளைக்கேற்ப அநேக நிறுவனங்கள் புகலிடம் வழங்குகின்றன.
அவற்றுள் சில

★ S.O.S நிறுவனம்
★ இலங்கை இரட்சணிய சேவை
★ சிறுவர் பராமரிப்பு இல்லங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் மூலம் இன்றைய சிறுவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் குறித்து அறிவூட்டி; அவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து; நேர்மையான வழியில் செயற்படுவதற்கு உதவுகின்றன. நீங்கள் வாழும் சூழலில் யாதொரு சிறுவருக்குத் துன்பம் ஏற்பட்டாலும் அந்நிலையிலிருந்து அவர்களை மீட்டுக் கொள்வதற்கு உதவி புரிவது உங்களின் பொறுப்பாகும். அவ்வாறான துன்பங்களுக்கு உட்பட்ட சிறுவர்களைக் குறித்து பெரியோர்களோ, பாடசாலை ஆசிரியர்களோ அறிவுறுத்தி அவர்களின் வாழ்வைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

இறைவன் இவ்வாறு உங்களின் வாழ்வைப் பாதுகாப்பது போன்று நீங்கள் பிறரின் வாழ்வைப் பாதுகாப்பதற்கு செயற்பட வேண்டும். ஒவ்வொருவரினதும் வாழ்வை மதித்து நடப்பது அவசியமாகும்.
இவ்வாறு பாடசாலைக் காலத்தில் இருக்கும் உங்களின் வாழ்வானது பெறுமதியான வாழ்வு என்பதை மனதிற் கொள்ளுங்கள். இறைவன் படைப்பைப் பராமரிப்பதோடு உங்களை விசேடமாகப் பாதுகாக்கின்றார் என்பதை நம்புங்கள். இவ்வாறு ஒவ்வொரு வரும் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கு செயற்படவேண்டும் என்பதை மனதிற் கொண்டு வாழ்வோம்.

**செயற்பாடு**

1. பாடசாலையில் உங்கள் நண்பனையோ நண்பியையோ பாதுகாப் பதற்காக நீங்கள் செயற்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குக.
2. மத்தேயு 6:25- 34 இல் இறைவன் படைப்பைப் பராமரிக்கும் முறைகளைப் பற்றிய மூன்று கருத்துக்களை எழுதுக.

# 2. படைப்பை நாம் பாதுகாப்போம்

**கடவுள் படைத்த பாதுகாப்பான உலகைப் பாதுகாக்கும் பொறுப்பை கடவுள் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். அது தொடர்பாகக் கற்பதே இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

**தொடக்கநூல். 1:28-30, 2:15**

**" கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல்மீன்கள், வானத்துப்பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்"**

**(தொடக்கநூல்-1:28)**

கடவுள் மனிதனை அழகான ஏதேன் தோட்டத்தில் குடியிருக்கச்செய்து அத்தோட்டத்தில் மனிதன் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் உருவாக்கிக் கொடுத்தார். அவ்வாறே அனைத்துப் படைப்பையும் கடவுள் மனிதனிடம் ஒப்படைத்தார். அவனுக்கு ஆசி வழங்கி படைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொடுத்தார்.

**கடவுள் மனிதனுக்கு வழங்கிய பொறுப்புக்கள்**

- பிள்ளைச் செல்வங்களை பெறுதலும் விருத்தி அடைதலும்
- பலுகிப் பெருகி மண்ணுலகை ஆளுதல்
- விலங்குகளைப் பாதுகாத்து ஆளுதல்
- மண்ணுலகைப் பாதுகாத்து அதைப் பண்படுத்தல்
- படைப்பில் தேவையான பயன் பெறுதல்


கீழே உள்ள திருவிவிலிய வசனத்தின்படி இவை மேலும் உறுதிப்படுகின்றது

**"ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்."**

**தொடக்கநூல்:2:15**

அன்று கடவுள் ஏதேன் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காக மனிதனை அங்கு குடியிருக்கச் செய்தார். ஏதேன் தோட்டத்தைப் பாதுகாத்தல் என்பது முழு படைப்பையும் பாதுகாத்தல் என்பதாகும். அவ்வாறே படைப்பை விருத்தி செய்வதும் அப்படைப்பில் இருந்து தேவையான பயனைப் பெறுவதும் மனிதனின் பொறுப்பாகும்.

**தியானிப்போம்**




இன்றைய சமூகத்தில் மனிதனின் சுயநலமான செயற்பாட்டினால் கடவுளின் படைப்பு பாதிப்படைகின்றது. அதனூடாக மனிதனுக்கு வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வரட்சி, நோய், துன்பங்கள் போன்ற தீமையான விளைவுகள் ஏற்படுகின்றன.

***மனிதன் மூலமாக கடவுளின் படைப்பு அழிவுக்குள்ளான சந்தர்ப்பங்கள் எவை?***



மரங்களை வெட்டி காடுகளை வெட்டந்தரையாக்குதல்



அசுத்தமான தண்ணீரை சுத்தமான ஆற்று நீரில் கலக்கச் செய்தல்



வளி மாசடைதல்



சூழல் மாசடைதல்

மனிதனின் செயற்பாட்டின் காரணமாக கடவுளின் படைப்பு அழிவுக்கு உட்படும் சந்தர்ப்பங்களை மேலே தரப்பட்ட படங்களின் மூலம் நீங்கள் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு சூழல் மாசடையும் நிலைமைகளில் இருந்து உலகைப் பாதுகாப்பதற்கு கீழே தரப்பட்ட செயற்பாட்டு வழிமுறைகளை நீங்கள் பின்பற்றலாம்.

- ★ வீட்டுச் சூழலைப் பாதுகாத்தல்.
- ★ பாடசாலைச் சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல்.
- ★ பாடசாலையின் செயற்பாடுகளுக்கு சூழல் பராமரிப்பு அமைப் புகளுடன் தொடர்பு கொள்ளுதல்.
- ★ உங்கள் பிரதேசத்தில் சூழலைப் பாதுகாப்பதற்கு உருவாகி இருக்கும் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுதல்.
- ★ சூழற் பாதுகாப்பிற்கான செயற்பாட்டிற்காக சிரமதான வேலைகளில் பங்கு கொள்ளுதல்.
- ★ பொலித்தீன், பிளாஸ்டிக் போன்று அழிந்து போகாமல் நீண்ட காலம் நிலைக்கும் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுதல்.
- ★ பொருட்களைச் சிக்கனமாய் பயன்படுத்தல்.
- ★ சூழலில் இருக்கும் மரம், செடி, கொடிகள், விலங்குகளைப் பாது காத்தல்.

கடவுள் எங்களுக்குப் பெற்றுத் தந்த படைப்பைப் பாதுகாத்து மேலும் முன்னேற்றமடையச் செய்து வருங்கால சந்ததியினருக்கு அதனை ஒப்படைப்பது எமது கடமையாகும். எம்மிடம் கடவுள் கொடுத்த வளங்களை தேவைக்கேற்ற அளவில் பயன்படுத்த வேண்டும். எமக்கு மட்டுமல்லாது பிறரின் வாழ்விற்கும் பாதுகாப்பான சூழலை பெற்றுக் கொடுப்பது எமது கடமையும் பொறுப்புமாகும்.

செயற்பாடு

1. படைப்பைப் பாதுகாப்பதற்கும் விருத்தி செய்வதற்கும், பயன் பெறுவதற்கும் நீங்கள் எடுக்கும் செயற்பாட்டு வழிமுறைகள் 2 எழுதுக.

2. உமது பாடசாலைச் சூழலைப் பாதுகாத்துச் செயற்படும் சூழல் அமைப்புகளில் நீர் தலைமை வகிப்பவரென எண்ணி வருடாந்தத் திட்டத்தை தயாரிப்பதற்கு உமது ஆலோசனைகள் 5 எழுதுக.

# 3. இறைபடைப்பின் நிலையான தன்மை

**இறைவன் எமக்குப் படைத்துக் கொடுத்த அழகிய உலகமானது புதுமையானதாகும். மனிதர் புரிந்து கொள்ள முடியாத அநேக காரியங்கள் இன்றும் படைப்பினூடாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. உலக ஆரம்பம் முதல் இன்றுவரை நிகழும் இறைபடைப்பானது நிரந்தரமாகத் தொடர்ந்து விருத்தியடைவதைப் பற்றி ஆராய்ந்துப் பார்ப்பதே இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**


**யோபு:36:25-33**

**நீர்த்துளிகளை அவர் ஆவியாக இழுக்கின்றார்;**
**அவற்றை மழையாக வடித்துக் கொடுக்கின்றார்**
**முகில்கள்அவற்றைப் பொழிகின்றன.**
**மாந்தர் மேல் அவற்றை மிகுதியாகப்**
**பெய்யச் செய்கின்றார்.**
**யோபு 36: 27-28**

மேலே தரப்பட்ட திருவிவிலியப் பகுதியைக் கவனிக்கும்போது, நீர்த் துளிகளின் செயற்பாடுகள் தெளிவாகின்றன. இது எவ்வளவு புதுமையான இறைபடைப்பானது எனத் தேடிப் பார்ப்போம்.

நீர் → திரவம்
நீர் → ஆவி
நீர் → திண்மம்

இறை படைப்பின் புதுமையான நீர்த்துளிகள் உலகத்தில் திரவமாக மாத்திரமல்ல திண்மமாகவும் ஆவியாகவும் செயற்படுகின்றன. அவை இறை படைப்பின் நிலையான செயற்பாடாக இன்றும் தொடர்ச்சியாக வெளிப்படும் சந்தர்ப்பங்களாகக் காணமுடியும்.



நீர்வட்டம்

இப்படத்தின் மூலம் இதை அறிந்து கொள்ளுங்கள்.

**உரையாடலில் எமது கவனத்தைச் செலுத்துவோம்**

சூரியன் - மழைமேகமே! இனிமை நிறைந்த நாளாக அமையட்டும். நீண்ட நாட்களின் பின்னர் தானே நாம் சந்திக்கின்றோம்.

மழைமேகம் - உமக்கும் அவ்வாறே உரித்தாகட்டும். நீர் சொன்னது சரி நான் உம்மைப் பல நாட்களுக்குப் பின்புதான் சந்திக்கின்றேன்.

சூரியன் - அன்று பெரிய மழையாக பூமியனைத்திலும் பொழிந்தாய் நினைவிருக்கின்றதா?

மழைமேகம் - என்ன நான் மறப்பதா? அன்றிலிருந்து நீர்த்துளியாக உலகத்தின் அனைத்து இடங்களிலும் பொழிந்து முழுத் தரையையும் செழிப்புறச் செய்துதான் நான் மீண்டும் ஆகாயத்திற்கு வந்தேன்.

சூரியன் - உமது வாழ்வைப் பற்றி நினைக்கையில் எனக்கு மிகவும் புதுமையாக இருக்கின்றது ஆகாயத்தில் மேகங்களாக பூமியில் உள்ளோர்க்கு நிழல் தருவதும் மழையாகப் பூமியைச் செழிப்புறச் செய்வதும் மீண்டும் ஆவியாக ஆகாயத்திற்கு ஏறி மேகங்களாகக் காணப்படுவதும் புதுமை அல்லவா?


மழைமேகம் - புதுமையடைவதில் எதுவும் இல்லை நண்பனே! என்னைப் போல் இன்னும் அநேக இறைப்படைப்புக்களை இறைவன் படைத்துள்ளார் அல்லவா?

சூரியன் - அவை என்ன படைப்புக்கள்?

மழைமேகம் - உம்மைப் பற்றிச் சிந்திக்கும்போது நீர் காலைவேளை யிலே உலகை வெளிச்சமாக்கி மாலையில் மறைகின்றீர். உமது நண்பனாகிய சந்திரன் இரவு முழுவதும் உலகை வெளிச்சமாக்கிக் காலையில் மறைகின்றது.

சூரியன் - உண்மைதான், எம்மைப்போலப் புதுமையான இறை படைப்புக்கள் இன்னும் எத்தனை இருக்கும்? புது மையான நாம் எம்மைப் படைத்த இறைதந்தைக்கு நன்றி செலுத்துவோம்.

மேலே உள்ள கலந்துரையாடலின் மூலம் புதுமையான சுழற்சி முறைகள் நிலவும் அநேக இறைபடைப்புக்களை நீங்கள் புரிந்து கொள்வதற்கு முடியும். பூமியிலே சுழற்சி முறையில் முன்னோக்கிச் செல்லும் இறைபடைப்புக்கள் பலவற்றை கீழே காணலாம்.




மேலே கூறப்பட்ட அட்டவணையின்படி இறைவனின் தொடர்வட்டப் படைப்பின் செயற்பாடுகள் இன்றும் நிகழ்கின்றன என்பதை உங்களால் புரிந்து கொள்ளமுடியும். இந்தத் தொடர் இறைச் செயற்பாடு இன்றி உலகத்தின் நிகழ்வுகள் முன்னோக்கிப் பயணிக்க முடியாது. எனவே இதற்கு உங்களால் பங்களிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- இயற்கையான காடுகளைப் பாதுகாத்தல்.
- சுற்றியுள்ள சூழலில் அமைந்துள்ள செடி, மரம் கொடிகளைப் பாதுகாத்தல்.
- தண்ணீரைச் சிக்கனமாய் பயன்படுத்தல்.
- சூழலில் வாழும் விலங்குகளின் வாழ்வைப் பாதுகாத்தல்.
- சூழலில் அழிந்து போகும் விலங்குகளின் வாழ்வைப் பாதுகாத்தல்.
- விளை நிலங்களை மண்ணிட்டு நிரப்பி வேறு தேவைகளுக்குப் பயன் படுத்துவதைத் தவிர்த்தல்.

மேலேயுள்ள செயற்பாடுகளைப் பின்பற்றி சூழலுடன் இணைந்து வாழ்வதற்கு உமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அதனூடாக உமது வாழ்விற்கும் சூழலுக்கும் பாதுகாப்புக் கிடைக்கும்.

இறை படைப்பானது தொடர் செயற்பாடாக அன்றும் இன்றும் நிலையானதாகவும் எதிர்காலத்திலும் முன்னோக்கிச் செல்லக் கூடிய தாகும். பூமியிலே நிகழும் தொடர் படைப்புக்காக இறைவனுக்குத் துதி செலுத்துவது எமது கடமையாகும். அதுமட்டுமல்லாது இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கும் தொடர் படைப்பின் விருத்திக்காக எம்மை அர்ப்பணித்து செயற்படுவதும் எமது பொறுப்பாகும்.

**செயற்பாடு**

1. யோபு *36: 25-33* வரையுள்ள வசனங்களை வாசித்து இறைவனின் செயற்பாடு இன்றும் நிகழும் சந்தர்ப்பங்கள் சிலவற்றை எழுதுக.
2. தொடர்ச்சியாக நிகழும் இறை படைப்பை விருத்தி செய்வதற்கு நீர் எடுக்கும் செயல் முறைகள் 5 எழுதுக.

# 4. மாறா அன்பு நிறைந்த இறைவன்

**ஆண்டவரின் பேரன்பில் நம்பிக்கை கொண்டு இறைபயம் உள்ளோராய் வாழ்வைக் கட்டி எழுப்புவதைக் கற்பதே இப்பாடத்தில் கற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.**

**திருப்பாடல் 103:1-17**

திருப்பாடல் 103 ல் ஆண்டவரின் நிலையான அன்பு கீழே காண்பித்துள்ளது போன்று விபரிக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து நோய்களிலும் பாதுகாத்து நன்மையினால் திருப்தி யடையச் செய்யும் அன்பு.

★ பாவத்தில் இருந்து மீட்கும் அன்பும், கருணை காட்டும் அன்பும்.


★ இரக்கமும் தயவும் பூரண கருணையும் காட்டும் அன்பு.

★ தந்தையைப் போல் தவறை மன்னிக்கும் நிலையான அன்பு.

★ சதாகாலமும் நீடித்திருக்கும் அன்பு.

ஆண்டவரின் இந்த அன்புக்கு இணையாகப் பூமியிலே எதுவுமில்லை அவரின் நிலையான அன்பு எப்போதும் எம்மை நல்வழிக்கு நடத்து கின்றது. தீமையான செயற்பாடுகளில் இருந்து எம்மை விலக்கி அதில் இருந்து எம்மை விடுதலையாக்குகின்றது.

ஆண்டவரின் நிலையான அன்பினூடாக எமக்குக் கிடைக்கும் அருட்கொடைகள் என்ன என்பதைத் தேடிப்பார்ப்போம்.




ஆண்டவரின் நிலையான அன்பினூடாக நீர் பெறும் வரப்பிரசாதத்தோடு பிறரின் வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு செயற்படுவது அவசியமாகும்.

இவ்வுலகில் வாழும் அனைவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் களாவோம். குடும்பத்தை உருவாக்குபவர் இறைவனே, குடும்பத்தினூ டாகவே சமுதாயம் உருவாகின்றது.

குடும்பமாகவும், சமுதாயமாகவும் நாம் ஒன்றாய் வாழும்போது கிடைக்கும் விசேட பெறுமதிகளாவன,

- பாசம்
- பாதுகாப்பு
- அர்ப்பணிப்பு
- தைரியப்படுத்தல்
- மன்னிப்பு வழங்குவதும் பெறுவதும்.

இவ்வாறு நாம் ஒரு குடும்பமாக ஒன்றாக வாழும் போது எம்மிடையே நிலவும் பெறுமதிகள் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழி வகுக்கும். இறைவனின் நிலையான அன்பினூடாக அப்பெறுமதிகள் எமக்கு உரிமையாகின்றன.

இறைவனின் மாறாத அன்பினால் நாம் பெறும் பெறுமதிகளை சமு தாயத்தில் காண்பிக்க வேண்டிய முறைகளை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் காணமுடியும்.

| இறை அன்பின் பெறுமதிகள் | எமது வெளிப்பாடுகள் |
| --- | --- |
| சுகம் என்பது | சுகத்தை எதிர்பார்ப்பவர்கள் நலம் பெறுவதற்கு உதவுதல் |
| பாவத்தில் இருந்து பாதுகாப்பு | பாவத்தில் இருந்து மீட்டுக் கொள்ளுதல் |
| தவறுகளுக்கு மன்னிப்பு | தவறு செய்வோருக்கு மன்னிப்பு வழங்குதல் |
| தயவும் இரக்கமும் | ஏழ்மையானோருக்கு இரக்கம் செய்தல் |
| நன்மைக் கூடாக பூரண மகிழ்ச்சி | நல்லவற்றில் மகிழ்வைத் தேடுவதில் ஈடுபடச் செய்தல் |
| நீதி நியாயமும் சமத்துவமும் | ஒடுக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கச்செய்தல் |
| இறை பிள்ளைகள் | அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என எண்ணி மதித்தல் |

ஆண்டவரின் நிலையான அன்பினூடாகப் பெலனடையும் நீங்கள் பிறரின் வாழ்வையும் உயர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியமாகும். அதனூடாக இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கும் நீதி நியாயம் நிறைந்த அன்பின் அரசை உருவாக்கலாம்.



**ஆண்டவரின் பேரன்போ**
**அவருக்கு அஞ்சுவோர் மீது**
**என்றென்றும் இருக்கும்.**
**திருப்பாடல்:103-17.**

மேலே உள்ள விவிலிய வசனத்தின்படி நீங்கள் இறை பயத்தோடான வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது உறுதியாகின்றது.

**ஆண்டவருக்கு அஞ்சுவது என்பது என்ன?**

திருவிவிலியத்தில் யோபு 28:28 ன் படி ஆண்டவருக்கு அஞ்சுவது என்பது ஞானத்தின் ஊற்று என்பதைக் காண்கின்றோம். இதனூடாக கடவுள் பயமுள்ள வாழ்வை நோக்கி பயணிக்க முடியும்.

சிறு வயது முதல் உங்களது வாழ்வை நல்லவற்றிற்கு முதலிடம் கொடுத்து கடவுளுடன் நெருங்கி வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

**ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வை வாழ்வதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

- இறைவார்த்தையை வாசித்துத் தியானித்தல்
- தினந்தோறும் இறைவேண்டலோடு இறைவனோடு தொடர்பு கொள்ளல்
- ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்ப் படிதல்
- ஞாயிறு ஆராதனையில் பங்கு கொள்ளல்
- எப்போதும் நல்லவைகளுக்கு முதலிடம் கொடுத்து செயற்படல்
- சமய காரியங்களில் ஆர்வத்தோடு பங்கு பெறுதல்
- சமூகத்தில் இறை பிள்ளையாக முன்மாதிரியான வாழ்வை வாழ்தல்.

மேற்கூறப்பட்டுள்ளவாறு வாழ்வை அமைத்துக் கொள்வதன் மூலம் இறைவனுக்கு அஞ்சிய வாழ்வை வாழ்வதற்கு வழியமைத்துக் கொள்ளலாம். அதுமட்டுமன்றி அயலாரின் வாழ்வையும் மதித்து அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்போது இறைவனின் நிலையான அன்பு சதாகாலமும் உங்கள் வாழ்வில் நிலவுவது உண்மையாகும்.

**செயற்பாடு**

1. திருப்பாடல் 103: 1-17 வசனங்களில் ஆண்டவரின் நிலையான அன்பைப் பற்றி குறிப்பிடப்பட்ட கருத்துக்களை எழுதுக.
2. இறை பயத்தோடான வாழ்வை வாழ்வதற்கு நீங்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் 4 எழுதுக.

# 5. தூதுப் பணியின் செயற்பாடு

**இயேசுவின் பரிபூரண வாழ்விற்கும் பணிக்கும் வழியை ஆயத்தப்படுத்துவதற்குத் திருமுழுக்கு யோவான் மூலமாக நிறை வேற்றப்பட்ட முன்னோடி தூதுப்பணியானது மிகவும் முக்கியம் வகிக்கின்றது. இம் முன்னோடி தூதுப்பணியையும் இதன் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் படிப்பினைப் பற்றியும் இப் பாடத்தின் மூலம் கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்பது நமது நோக்கமாகும்.**

**மத்தேயு 3: 1-12**

மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும் வட்ட மேசைக் கலந்துரையாடல் நிகழ்விற்கு இன்றும் நண்பர்களும் நண்பிகளும் வந்திருந்தனர். இவ் வனைவரும் ஒய்வுநாட் பாடசாலையிலும், அரச பாடசாலையிலும் ஒரே வகுப்பிலுள்ள நண்பர் நண்பிகளாவர். வழமைபோல வட்ட மேசை நிகழ்வை நடாத்தும் விக்டர் அண்ணா நேரத்தோடு வந்திருந்தார். அவர் ''நல்லது தம்பி தங்கைகளே! இன்றும் நாம் எமது கலந்துரையாடலை ஆரம்பிப்போம். அஜித் தம்பி ஜெபத்தில் எங்களை வழிநடத்துவார்''.

அஜித் தம்பியின் ஜெபத்தோடு வட்ட மேசைக் கலந்துரையாடல் ஆரம் பித்தது.

விக்டர் அண்ணா - எமது கலந்துரையாடலுக்கான இன்றைய தலைப்பை அஜித் தம்பி அறிமுகம் செய்வார். (கை தட்டும் ஓசை) ஆம், அஜித் தம்பி இன்று என்ன தலைப்பு?

அஜித் - ''இன்று நாம் கலந்துரையாடப் போவது கிறிஸ் தவர்களான எம் அனைவருக்கும் மிகவும் முக்கியமான தலைப்பாகும். அவ்வாறே இது திருவிவிலியத்தில் பிரதான கதாபாத்திரங்களுக்கு ஏற்ற தலைப்பாகும். அது தான் திருமுழுக்கு யோவானின் முன்னோடி தூதுப்பணி''.


விக்டர் அண்ணா - இப்போது நாம் ஆரம்பிப்பதற்கு முன் சுதர்ஷித் தங்கை திருமுழுக்கு யோவானைப் பற்றி சிறிய ஒரு அறிமுகத்தை முன் வைப்பார்.

சுதர்ஷி - திருமுழுக்கு யோவான் செக்கரியாவுக்கும் எலிசபெத்துக்கும் முதிர்வயதில் பிறந்த மகன். இவர் பிறந்தது முதல் விசேடமான தூதுப்பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டவர் என்பது காபிரியேல் வானதூதரால் செக்கரியாவுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

விக்டர் அண்ணா - அடுத்த சந்தர்ப்பத்தை நாம் சுதாகர் தம்பிக்கு வழங்குவோம்.

சுதாகர் - திருமுழுக்கு யோவானின் பணிக்கான ஆயத்தமும், எளிமையான வாழ்வும் பற்றி நான் உங்களோடு கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கிறேன்.

**ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்,**
**அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்**
**என**
**பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது**
**(மத்தேயு 3:3, ஏசாயா 40:3)**



திருமுழுக்கு யோவானின் விசேட பணியைக் குறித்து எசாயா இறைவாக்கினர் பல வருடங்களுக்கு முன்னரே இறைவாக்கு உரைத்திருந்தார். யூதேயா பாலை நிலத்தில் அலைந்து திரிந்து திருமுழுக்கு யோவான் இப்பணிக்காக விசேடமாக ஆயத்தம் செய்த முறையை நாம் காண்கின்றோம். அவர் மிகவும் சாதாரணமான வாழ்க்கையை வாழ்ந்தார். திருமுழுக்கு யோவான் ஒட்டகமுடி ஆடையை அணிந்து தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார். வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் அவருக்கு உணவாக இருந்தது. அவரின் எளிமையான வாழ்வு இறை பணிக்கு மிகவும் இலகுவாக இருந்தது''.

விக்டர் அண்ணா - மிகவும் நன்றி சுதாகர் தம்பி, திருமுழுக்கு யோவானின் பணிக்காக ஆயத்தமும், எளிமையான வாழ்வு வாழ்ந்த முறையும் கிறிஸ்தவ வாழ்வுக்கு பயன் உள்ளதாக அமைவதைப் பற்றிக் கூற இப்போது சஞ்சு தங்கைக்குச் சந்தர்ப்பம் வழங்குவோம்.

சஞ்சு - எத்தகைய விசேடமான பணியையும் செய்வதற்கு முன் அதற்கான சிறந்த ஆயத்தம் செய்வது மிகவும் அவசியமாகும். எப்போதும் ஜெபத்தோடும் இறைவார்த்தையை வாசித்து இறைவனோடு தொடர்பு கொண்டு எளிமையாக வாழ்வதற்கும் பழகிக்கொள்வது அவசியமாகும். உண்பதும், குடிப்பதும், ஆடை அணிகள் அணிவதிலும் எளிமையாக வாழ்ந்து இறைவனுக்காகச் செயற்படும் பணியானது இலகுவானதாக இல்லாவிட்டாலும் அர்த்தமுள்ளதாகின்றது.

விக்டர் அண்ணா - இப்போது எம்மோடு இணைந்து கொள்வது மேரி தங்கை.

மேரி - திருமுழுக்கு யோவான் நிறைவு செய்த மனந்திரும்புதலின் பணியைப் பற்றி உங்களோடு என் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கிறேன். திருமுழுக்கு யோவான் பாலை நிலத்துக்கு வந்து, 'மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது' (மத்தேயு 3:2) என்று பறைசாற்றி வந்தார். எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகளனைத்திலும் இருந்த மக்கள் பாவ மன்னிப்புக்கான திருமுழுக்கைப் பெறுவதற்காகத் திருமுழுக்கு யோவானிடம் வந்தார்கள். அவ்வாறே பரிசேயர், சதுசேயருள் பலர் மனந்திரும்புதலின் திருமுழுக்கைப் பெறுவதற்காக அவரிடம் வந்தபோது, ''விரியன் பாம்புக் குட்டிகளே''

எனக் கூறி திருமுழுக்கு யோவான் அவர்களை மிகவும் கடிந்துகொண்டார். தம்மை ஆபிரகாமின் குமாரர் என எண்ணி பெருமை கொள்ள வேண்டாம் என அவர்களை எச்சரித்தார். எனவே தமது பாவங்களுக்காக உண்மையாய் மனந்திரும்பி மீண்டும் பாவம் செய்ய மாட்டோம் என உறுதியாய் மனந்திரும்புதலுக்கான திருமுழுக்கின் பெறுமதியை உணர்ந்தவர்களாக வந்தவர்கள் அனைவரும் யோவானிடம் திருமுழுக்கு பெற்றார்கள்.

விக்டர் அண்ணா - உங்களுடைய வினாக்களை வினவுவதற்காக இப் போது சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது.

கவின் - பரிசேயர், சதுசேயர் போன்ற மதத் தலைவர்களும் திருமுழுக்கு யோவானிடம் வருவதற்கு விசேட காரணங்கள் உண்டா?''

விக்டர் அண்ணா - அவர்கள் ஏனையோர் வருவதைக் கண்டு வந்தார்களேயன்றி உண்மையாக திருமுழுக்குப் பெறுவதற்கு விருப்பம் இருந்ததாக நினைக்க முடியாது. திரு முழுக்கு யோவான் இதைப் புரிந்து கொண்டார். அதனால்தான் அவர்களை 'விரியன் பாம்புக் குட்டிகள்' என அழைத்தார். இப்போது சஞ்சு தங்கை..

சஞ்சு தங்கை - ''திருமுழுக்கு யோவானின் மனந்திரும்புதலின் தூதுப் பணியினூடாக கிறிஸ்தவ வாழ்வுக்கு நாம் மிகவும் அவசியமான பல படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள முடியும். மனதாலும், வார்த்தையாலும், செய்கையாலும் நாள்தோறும் நாம் செய்யும் பாவங்களைக் குறித்து உண்மையாய் மனம்வருந்தி, இறைவனின் மன்னிப்பைப் பெற்று, புது வாழ்வு வாழ்வதற்கு செயற்படுவது அவசியமாகும். எமது வாழ்வு கடவுளுக்கு முன்பாக கனி கொடுக்கும் மரங்களாக மாற வேண்டும். இறுதி நியாயத்தீர்ப்பிற்கு முகம் கொடுக்கும்போது நாம் மெய்யாக களஞ்

சியத்தில் சேர்த்துவைக்கப்படும் தானியங்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் நாம் களைகளைப்போல் அழிவைத் தேடிக் கொள்வோம். இவ்வாறு யோவானின் பணியினூடாக இயேசுவின் முன்மாதிரியை நாமும் பெற்றுக் கொள்வோம்''.

விக்டர் அண்ணா - அடுத்ததாக முன்வைப்பது நிதர்ஷன் தம்பி.

நிதர்ஷன் - திருமுழுக்கு யோவானின் தூதுப்பணியினூடாக சிறப்பாக வெளிப்படுவது தாழ்மை என்னும் நற்குணம் என நான் கருதுகின்றேன். அவர் மிகவும் தாழ்மையுள்ளவராகக் காணப்பட்டார் என்பது தெளிவாகின்றது. நான் உங்களுக்கு தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். எனக்குப் பின் ஒருவர் வருகிறார். அவர் என்னைவிட வலிமைமிக்கவர், அவருடைய மிதியடிகளைத் தூக்கிச் செல்லக்கூட எனக்குத் தகுதியில்லை எனக் கூறி அவருடைய தாழ்மையை வெளிப்படுத்துகின்றார். மேலும் அவர் மக்களின் மனந்திரும்புதலுக்காகத் தண்ணீரில் திருமுழுக்கு கொடுப்பதை விட மிகவும் உன்னத திருமுழுக்கை இயேசு தருவார் என்பதையும் கூறுகின்றார். இயேசு கொடுக்கும் திருமுழுக்கை 'தூய ஆவி என்னும் நெருப்பால் கிடைக்கும் திருமுழுக்கு' என்று அறிமுகப்படுத்துவதன் மூலம் தனது பணியைவிட இயேசுவின் பணி சிறப்பானது என்பதை வெளிப்படுத்தியுள்ளார். இத்தன்மையும் அவரின் தாழ்மையையே காண்பிக்கின்றது.

தீபா - திருமுழுக்கு யோவான் எதிர்காலத்தில் நிகழப் போகும் காரியங்களைக் குறித்து மக்களுக்குக் கூறுவதால் அவரை ஒரு இறைவாக்கினராக நாம் ஏற்றுக்கொள்ளலாமா?

விக்டர் அண்ணா - ஆம் தங்கை, அவரை இறைவாக்கினராக ஏற்றுக் கொள்ளலாம். யோவானை இறைவாக்கினர்களை விட

மேலானவர் எனவும் இயேசு வெளிப்படுத்தினார். நான் இப்போது கிறிஸ்தவ வாழ்வுக்கு திருமுழுக்கு யோவானின் தாழ்மையான வாழ்க்கையில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளும் முன்மாதிரிகளைப் பற்றி கூறுவதற்கு சஞ்சு தங்கையை அழைக்கின்றேன்.

சஞ்சு - திருமுழுக்கு யோவான் எப்போதும் இயேசுவின் முன்னோடியாக அவருக்கு வழியை ஆயத்தம் செய்யவும், இயேசுவை உயர்த்தியும் தன்னைத் தாழ்த்தியும் பணியாற்றி வாழ்ந்தார். அவ்வாறே நாமும் இறைவனுக்குப் பணி செய்வோம்.

விக்டர் அண்ணா - மற்றைய நாட்களைப்போன்று இன்றும் வட்ட மேசைக் கலந்துரையாடலின் மூலமாக நாம் அநேக காரியங்களைக் கற்றோம். மீண்டும் நாம் இவ்வாறு சந்திப்போம்.

அன்பின் இறைவா, திருமுழுக்கு யோவானின் முன்னோடித் தூதுப் பணிக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவரின் முன்மாதிரியான சாதாரண வாழ்வை நாம் வாழ்வதற்கும் எப்போதும் எமது பாவங்களுக்காக மனம் வருந்தி மறை வழியில் செல்வதற்கும் எமக்கு உதவி ஈந்தருளும். ஆமென்

**செயற்பாடு**

1. திருமுழுக்குயோவானின் வாழ்வில் காணக் கூடிய குணாதிசயங்களை அட்டவணைப்படுத்துக.
2. திருமுழுக்குயோவானின் மனந்திரும்புதலின் பணி யினூடாக நாம் பெறும் வழிகாட்டல்களை விளக்குக.

# 6. சோதனையில் வெற்றி

**இயேசு உலக வாழ்வில் எதிர்நோக்கிய சோதனைகளில் வெற்றியடைந்த முறைகளின் முன்மாதிரியுடன் எமது வாழ் வின் சோதனைகளில் வெற்றி அடையும் வழிமுறைகளைக் கண்டறிதல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**லூக்கா 4:13, மாற்கு 8:13, யோவான் 6:14-15, மாற்கு 15: 29-32**

ஆசிரியர் மாதாந்த மதிப்பீட்டுக்காக மாணவரை ஆயத்தமாகுமாறு பணித்தார் பாடங்களைக் கற்று வராத நேசன் பயமடைந்தான். ஆசிரியர் வினாத்தாளை வழங்கியவுடன் அனைவரும் விடை எழுத ஆரம்பித்தனர். நேசனின் கண்கள் அருகில் அமர்ந்திருந்த பிரதீபின் விடைத்தாளை நோக்கிச் சென்றது. ஏதோ ஒரு வகையில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டான். ஆனால் அது தவறு என அவனுக்குப் புரியவில்லை. நேசனைப் போன்று நாமும் பல சந்தர்ப்பங்களில் சோதனைக்கு உட்படு கின்றோம். அதனால் சில வேளைகளில் தவறுகளையும் செய்கின்றோம்.

இயேசு தமது வாழ்வில் பல சோதனைகளை எதிர் நோக்கினார் இயேசு தூய ஆவியால் பாலை நிலத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந் நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன் பின் அவர் பசியுற்றார் என லூக்கா நற்செய்தி நூலில் எழுதப்பட்டுள்ளது.

மேலும் அவரது பணியில் பல சந்தர்ப்பங்களில் சோதனைகள் ஏற்பட்டன. இயேசு துன்புற்று சிலுவையில் அறையப்பட்ட வேளையில் அவர் சோதனைகளை எதிர்நோக்கினார் என நற்செய்தி நூல்களில் எழுதப்பட்டுள்ளன.

இயேசுவின் சோதனைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

## 1. அற்புதத்தால் தனது வல்லமையை காட்டுமாறு கேட்டுக் கொண்ட சோதனை

★ பாலைநிலத்தில் நாற்பது நாட்கள் பசியுடன் இருந்த வேளையில் கற்களை அப்பமாக்குமாறு அலகையால் கட்டளை இடப்பட்டது. அற்புதம் எதிர் பார்த்து வலியுறுத்திய இந்த சோதனை அலகையால் ஏற்பட்டது.

**''மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை.''**
**இணைச் சட்டம் 8:3**

எனும் இறைவார்த்தையால் இயேசு மறுமொழி கூறி அலகையை தோல்வி அடையச் செய்தார்.

★ ஒருமுறை பரிசேயர் இயேசுவிடம் வந்து அவரை வார்த்தையால் பிடிக்குமாறு 'வானத்திலிருந்து அடையாளம் ஒன்றைக் காட்டுமாறு கேட்டபோது இயேசு ''இந்த தலைமுறையினர் அடையாளம் கேட்பதேன்? இத் தலைமுறையினருக்கு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது'' எனக் கூறினார்.

★ இயேசு சிலுவையில் அறையப்பட்ட வேளையில் ''சிலுவையிலிருந்து இறங்கி உன்னையே விடுவித்துக் கொள்.'' (மாற்கு 15:30) என்று அவ்வழியே சென்றவர் அவரை பழித்துரைத்தார். அவ்வாறே தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞர்களுடன் சேர்ந்து ''பிறரை விடுவித்தான். தன்னையே விடுவிக்க முடியவில்லை'' என்று ஏளனம் செய்தனர். இஸ்ரயேலின் அரசனாகிய மெசியா இப்போது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும்.'' (மாற்கு 15:32) என்றனர். இயேசு மறுமொழி எதுவும் கூறாது அமைதியாக இருந்தார். இச் சந்தர்ப்பங்களில் இயேசு இறை வார்த்தைகளைக் கூறி அமைதியான முறையில் சோதனைகளை வென்றார்.

## 2. இயேசுவின் வல்லமையைக் காட்டுமாறு வலியுறுத்திய சோதனை

★ அலகை அவரை உயர அழைத்துச் சென்று உலக அரசுகள் அனைத்தையும் காட்டி அவரிடம் ''நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவை ஆகும். (லூக்கா 4:7) என்றான். இயேசு அலகைக்கு அடிபணியவில்லை.



**‘‘உன்  கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக’’**
**லூக்கா 4:8,  இணைச்சட்டம் 6:13**

என இயேசு மறுமொழி கூறி சோதனைகளை வென்றார்.

★ ஐயாயிரம் பேருக்கு உணவளித்த சம்பவத்தில் அற்புதத்தைக் கண்ட மக்கள் அவரைப் பிடித்து பலவந்தமாக அரசனாக்க முயற்சித்த வேளை இயேசு சோதனையிலிருந்து விடுபட தனிமையாக மலைக்குச் சென்றார்.
(யோவான் 6: 14 – 15)

வல்லமையைப் பாவிக்கும் சந்தர்ப்பங்களில் இயேசு

1. இறைவார்த்தையால் மறுமொழி அளித்தார்.
2. தனிமையாக மலைக்குச் சென்று ஜெபம் செய்தார்.

அவர் ஒருபோதும் தீய சக்திகளுக்குக் கீழ்ப் படியாது இருந்தார் என்பது இதன்மூலம் தெளிவாகப் புலப்படுகின்றது.

**3. இறைவனைப் பரீட்சிப்பதற்கு கேட்டுக்கொள்ளும் சோதனை**

★ அலகை அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்று கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி

**''நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும். உம்மை பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் என்றும் உமது கால் கல்லில் மோதாத படிக்கு அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது'' என்றான்.**

**லூக்கா 4: 9-11, திருப்பாடல் 91:11**

*இயேசுவின் மறுமொழி*

**''உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம்.**

**லூக்கா 4:12, இணைச்சட்டம் 6:16**

*எனக் கூறி அலகையை வென்றார்.*

### *4.* இறைவிருப்பத்துக்கு எதிராக செயற்படுத்துவதற்கான சோதனை

★ இயேசு துன்புறுத்தல்களை எதிர்நோக்கும் முன்னர் கெத்சமனேயில் 'தந்தையே உமக்கு விருப்பமானால் இத் துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும்.'' என்று வேண்டுதல் செய்தார். இங்கு இயேசு இறைவிருப்பத்துக்கு ஏற்ப தெரிவு செய்யப்படவேண்டிய துன்பப் பாதையான சிலுவை வழி தொடர்பாக உள்ளத்தில் அலகையுடன் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பது தெளிவாகின்றது.

இயேசு அலகைக்கு இடமளிக்காது இறைவனிடம் வேண்டுதல் செய்தார் ''எனது விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்.'' (லூக்கா 22:42) என மறுமொழி அளித்தார். இவ் வேளையில் வானதூதர். அவரைப் பலப்படுத்தினர் என நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது வாழ்வுப் பயணத்தில் இவ்வாறான பல சோதனைகளை நாம் எதிர் நோக்க நேரிடும். அதேபோன்று பிறரும் அலகையின் சோதனைக்கு அகப்படுவர். இயேசு தமது சீடர்களிடம் கூறியது போன்று நாமும் நமது நண்பர்கள் சோதனைக்கு உட்படாதவாறு அவர்களுக்காக விண்ணப்பம் செய்ய வேண்டும். எமது சோதனைகளில் எமது நண்பரின் உதவியும் எமக்கு தேவைப்படும்.

**எமது வாழ்வின் சோதனைகளில் வெற்றி காண்பது எவ்வாறு?**

1. இயேசுவை முன்னுதாரணமாகக் கொண்டு இறைவார்த்தையைப் பயன்படுத்தல்.
2. சோதனையை மறுப்பதற்குப் பின்னடையாதிருத்தல்.
3. வாழ்வின் பிரச்சனைகளை வெற்றிகரமாக எதிர் நோக்குதல்.
4. நாள்தோறும் தூய ஆவியின் பலத்தால் போசணையும் துணிவும் பெறல்.
5. விண்ணப்பம் செய்து அமைதியுடன் செயற்படுதல்.
6. இறைவார்த்தையை நன்கு கற்று அதன் அடிப்படையில் வாழுதல்.
7. இறைவனில் மாத்திரம் விசுவாசம் வைத்தல்.
8. சோதனைகளை எதிர்நோக்கும் வேளையில் பாவத்தில் விழாமலிருத்தல்.
9. சோதனைகளை எப்போதும் துணிவுடன் வெற்றிகொள்ளல்.
10. எமது ஆசைகள், பலவீனம் என்பனவற்றை அறிந்து அலகையைத் தோற்கடித்தல்.

இவ்வாறாக சோதனையில் வெற்றிகாணும் வழிமுறைகளை அறிந்து கொள்வோம். இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவோம்.

**செயற்பாடு**

1. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள் யாவை?
2. உமக்கு ஏற்படும் சோதனைகளை எதிர்நோக்க தூயாவியின் துணிவும் பலமும் வேண்டி விண்ணப்பம் ஒன்றை எழுதுக.

# 7. மலைப்பொழிவில் வாழ்வு வளமடைதல்

**இயேசுவின் மலைப்பொழிவைக் கற்று அதனூடாக கிறிஸ்தவ வாழ்வுக்குக் கிடைக்கும் வளமான வழிகாட்டலை ஆராய்ந்து வலுவடைந்து சமூக பணியில் ஈடுபடுதல் இப் பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**மத்தேயு 5:13 - 16, 7:12**

இயேசுவின் போதனைகளின் சிறப்புத் தன்மை காரணமாக போதனையைக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் அவரைச் சூழ வந்தனர் என நற்செய்தி நூல்களில் எழுதப்பட்டுள்ளது.

- இயேசு தனது போதனைகளுக்கு அமைதியான இடங்களைத் தெரிவு செய்தார்.

★ மலையுச்சி
★ சமவெளி
★ கடற்கரையோரம்
★ திறந்த வெளி
★ வீடுகள்

இயேசுவின் போதனைகள் எளிதாக அமைந்திருந்தமையால் பொதுமக்கள் இயேசுவின் போதனைகளைக் கேட்க வந்தனர். ஏழைகள், சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவர்கள், ஆலயத்துக்கு அல்லது ஜெபாலயத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட வரிதண்டுபவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயுற்றோர் போன்றவர்கள் அடிக்கடி இயேசுவைச் சூழ்ந்து காணப்பட்டனர். இயேசுவின் அன்பும் கரிசனையும் அவர்களுக்குக் குறையின்றிக் கிடைத்தது.

இயேசு தனது போதனைக்கும் கற்பித்தலுக்கும் யூத சமூகத்தில் காணப்பட்ட வளங்களைத் தெரிவு செய்தார். ஆட்டுக்குட்டி, கடுகு, உப்பு, விளக்கு, திராட்சைத் தோட்டம், அத்தி மரம் போன்ற எளிய இயற்கை உதாரணங்கள் மூலம் போதனை செய்தார். இதனால் மக்கள் அவரைத் தேடி அண்மித்து வந்தனர்.

இயேசுவின் மலைப்பொழிவுப் போதனையை அறிந்துள்ளீர்களா? (மத்தேயு 5 - 7 அதிகாரங்கள்) இயேசுவின் சீடரும் திரளான மக்களும் போதனையைக் கேட்க மலைக்கு வந்தனர். கிறிஸ்தவ வாழ்வின் வழிகாட்டல் மற்றும் போதனை மலைப்பொழிவால் மக்களுக்குக் கிடைத்தன.

**கிறிஸ்தவ வாழ்வுக்கு மலைப்பொழிவின் மூன்றுவித வழிகாட்டுதல்**

(1). ***'பொன்விதி' மூலமாக கிறிஸ்தவ அன்பை உணர்வோம்.***

**''பிறர் உங்களுக்கு செய்ய வேண்டும் என விரும்புகின்றனவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.''**
**மத்தேயு 7:12**

பிறர் எம்மில் கரிசனை செலுத்துவதை நாம் விரும்புவது போல நாமும் அவர்களில் கரிசனை காட்ட வேண்டும் என இயேசு கூறினார். இதுவே பொன்விதியின் பொருளாகும். பிறர் உங்களில் எவ்வாறு கரிசனை காட்ட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?

- ★ கௌரவப்படுத்தல்
- ★ செவிமடுத்தல்
- ★ அன்பு காட்டல்
- ★ பகிர்தல்
- ★ சமமாக மதித்தல்
- ★ நேர்மையைக் கடைப்பிடித்தல்
- ★ நட்பு காட்டல்
- ★ உண்மையுள்ளவராக இருத்தல்
- ★ வாக்குறுதியை நிறைவேற்றல்



(2) **உலகில் உப்பாக கரைந்து பணி செய்வோம்.**

எமது நாளாந்த வாழ்வுக்கு உப்பு அவசியம். உப்பு எல்லா வீடுகளிலும் உண்டு. அது

★ உணவைச் சுவையூட்டுகின்றது.
★ உணவுக்கு உருசியைத் தருகின்றது.
★ கிருமிநாசினியாகப் பயன்படுகின்றது.
★ உணவை நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்க உதவுகின்றது.
★ உணவில் சேர்த்தவுடன் கரைந்து விடுகின்றது.

**''நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். மத்தேயு 5:13**

மேற்படி வார்த்தையில் இயேசு கருதியது என்ன?

**உப்பு உணவைச் சுவையூட்டுகின்றது.**

நீங்கள் உலகில் உப்பானால் பிறர் வாழ்வு வளம்பெற செயற்பட வேண்டும். துன்பத்தில், வேதனையில், பிரச்சனையில், பாவத்தில் வாழ்பவர்கள் ஆறுதலும் புதுவாழ்வும் பெற செயற்படுதல் கிறிஸ் தவர்களின் கடமையாகும்.

**உணவுக்கு உருசியைத் தருகின்றது.**

நீங்கள் உலகின் உப்பானால் உப்பில் காணப்படும் உப்புத் தன்மையை வேறொன்றால் கரைக்க முடியாது. அதனால் உப்பின் சுவையானது அதற்கே உரித்தானதாகும். உப்பை உபயோகிக்கும்போது அதன் தன்மையால் சுவை மாறுபடும். அதே போன்று நாமும் எமது வாழ்வுக்கு இறைவன் தந்துள்ள விசேட நற்பண்புகளால் பிறர் வாழ்வில் காணப் படும் தவறான வாழ்வுக் கோலத்தை மாற்றுவதற்கு எமக்கு ஆற்றல் அவசியம்.

**உப்பு கிருமிநாசினியாக பயன்படுகின்றது.**

நீங்கள் உலகுக்கு உப்பானால் நீங்கள் வாழும் சமூகத்தில் காணப்படும் தீயவைகளுக்கும் தவறானவைகளுக்கும் எதிராக செயற்பட வேண்டும். அதேபோன்று பிறர் வாழ்வில் காணப்படும் தவறு, தீய செயல்கள், பாவங்கள் போன்றனவற்றை அகற்றிட உப்பைப் போன்று செயற்பட வேண்டும்.

**உணவை நீண்ட நாட்களுக்கு பாதுகாக்க உதவுகின்றது.**

நீங்கள் உலகின் உப்பானால் உப்பின் தன்மையை சமூக நலன் கருதி பாவிக்க வேண்டும். எம்மைச் சூழ காணப்படும் தீயவைகளையும் தவறிழைக்கத் தூண்டும் காரணிகளையும் நீக்கி உமது உப்புத் தன்மையை உபயோகித்து பிறர் வாழ்வினைப் பாதுகாக்க உறுதுணையாக இருத் தல் வேண்டும். சமூக நலன் நிலைப்பாட்டுக்காக உழைக்க வேண்டும்.

**உணவில் சேர்த்தவுடன் கரைந்து விடுகின்றது.**

உப்பு கரைவதனால் அதன் பயன் அதிகரிக்கும். அதுபோல் நாமும் உலகின் உப்பாக செயல்பட இயேசுவும் எம்மில் பலனை எதிர்பார்க்கின்றார். எனவே நாம் சிறிதானாலும் இறையரசின் உலக செயற்பாடுகளில் எமது பயன்பாடு அளப்பரியது. இதனால் நாம் கட்டாயமாக உப்பைப் போன்று கரைந்து செயற்பட வேண்டும்.

**''உப்பு உவர்ப்பற்று போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?'' மத்தேயு 5:13**

இறைவன் எமக்கு அளித்துள்ள உப்பின் தன்மை அதாவது பெறுமதி அற்றுப் போனால் அதனை வேறொன்றால் நிரப்ப முடியாது. அதனால் நாம் உலகின் உப்பானால் இறையரசின் பெறுமதியை நிலைநாட்டி வாழவேண்டும் என இயேசு எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார் .

### (3) உலகில் ஒளியாக வாழ்வோம்.

இரவில் இருள் தோன்றுகின்றது. இரவு முடியும் வேளையில் சூரியன் உதித்து இருளை மறைக்கின்றது. முழு சுற்றாடலும் வெளிச்சம் அடை கின்றது.

**''நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்.**
**மத்தேயு 5:14**

இயேசு எம்மை உலகிற்கு ஒளி என அறிமுகம் செய்கின்றார். ஒளியின் பெறுமதியையும் முக்கியத்துவத்தையும் எமது வாழ்வில் நாள்தோறும் உணர்கின்றோம். ஒளியின்றி வாழ்தல் கடினமானது. இருளை நீக்க சிறு ஒளிக்கதிர் பயன்படுவது போல நாமும் ஒளியாக இருளை அகற்றலாம். இயேசு வின் ஒளி எம்மில் பரப்பிட இறைவன் விரும்புகின்றார் .

மலையுச்சியில் அமைந்திருக்கும் ஒளியை நீண்ட தூரம் வரை காணலாம். அதேபோன்று விளக்கைக் கொளுத்தி விளக்குத் தண்டில் வைக்கும்போது ஒளியானது இருளை அகற்றி பெரிய பகுதிக்கு வெளிச்சம் கொடுக்கும். விளக்கில் ஒளி ஏற்பட எண்ணெய் எரிய வேண்டும். மெழுகுதிரியில் ஒளி ஏற்பட மெழுகு உருக வேண்டும் உப்பின் சுவை ஏற்பட உப்பு கரைய வேண்டும். அதேபோன்று எமது வாழ்வில் இயேசுவின் ஒளி வீசும் போது பலர் வாழ்வில் ஒளி பெறுகின்றனர். நாம் வாழும் சுற்றாடலில் உலகுக்கு உப்பாகவும் ஒளியாகவும் பணி செய்திடுவோம்.

**செயற்பாடு**

1. 'பொன்விதி' எழுதப்பட்ட (புத்தக பக்ககுறி அட்டை ) தயாரித்து அலங்கரிக்கவும்.
2. உமது வகுப்பில் உப்பைப் போன்றும், ஒளி போன்றும் செயற்படக் கூடிய சந்தர்ப்பங்களை எழுதுக.

# 8. இறைவிருப்பத்தை நிறைவேற்றுவோம்

**இயேசுவின் துன்புறுதலுக்கு முன் இடம் பெற்ற நிகழ்வுகளையும் அதனூடாக கிறிஸ்தவர் கற்றுக் கொள்பவைகளையும் ஆராய்ந் தறிவதை இப்பாடத்தில் எதிர்பார்க்கின்றோம்.**

**மத்தேயு 26:26-30, யோவான் 13:1-20, மத்தேயு 26:36-46**

இயேசு உலகத்தின் பாவங்களுக்காகச் சிலுவையில் தமது வாழ்வை அர்ப்பணிப்பதற்கு முன் இடம்பெற்ற மூன்று நிகழ்வுகள் பின்வருமாறு:

i. ஆண்டவரின் இறுதி திருவிருந்து.

ii. சீடர்களின் கால்களைக் கழுவுதல்.

iii. கெத்சமனே தோட்டத்தில் விண்ணப்பம்.

மேற்படி மூன்று நிகழ்வுகளிலும் சீடர்களுக்கும் இயேசுவுக்கும் இடை யிலான தொடர்பு காணப்படுவதை அறியலாம்.

மேற்படி நிகழ்வுகளின் ஊடாக எமது வாழ்வுக்கு முன்மாதிரியாக அமையும் ஆன்மீக வழிகாட்டலை ஆராய்வோம்.


## I. ஆண்டவரின் இறுதி திருவிருந்து - மத்தேயு 26:26-30



## இயேசு சீடருடன் திருவிருந்தில் பங்குபெறுதல்



i. அப்பத்தை எடுத்து
ii. கடவுளைப் போற்றி
iii. அதைப் பிட்டு சீடர்களுக்குக் கொடுத்து
iv. **''இது உங்களுக்காக கொடுக்கப்படும் எனது உடல்'' (மத்தேயு 26:26) என்றார்.**
v. அவர்களுக்கு கொடுத்தார்.



i. கிண்ணத்தை எடுத்து
ii. நன்றி செலுத்தி
iii. **''இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன் படிக்கையின் இரத்தம். பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்.'' (மத்தேயு 26:28) என்றார்.**
iv. அதை சீடர்களுக்கு கொடுத்தார்

மேற்படி நிகழ்வின் ஊடாக இறைவனுக்கும் எமக்கும் இடையிலான உடன்படிக்கையை இயேசு ஏற்படுத்தினார்.

அப்பம் இயேசுவின் உடல் எனக் கருதப்படுகின்றது. அப்பத்தை பிட்குதல் என்பது இயேசுவின் உடல் சிலுவையில் சிதைவுபடுதல் ஆகும்.

இரசம் என்பது சிலுவையில் இயேசுவின் உடலிலிருந்து வழிந்தோடிய இரத்தமாகக் கருதப்படுகின்றது. இந் நிகழ்வானது இறைவன் மனிதனின் பாவத்துக்குச் செய்த பலியாகும்.

புதிய உடன்படிக்கையின் பங்குதாரர்களாகிய நாம் செயலில் ஈடுபடும்போது நாம் அவரது உடல் மற்றும் இரத்தத்தில் பங்குதாரர் ஆகின்றோம்.

எனவே அவரது உடலும் இரத்தமுமான அப்பமும் திராட்சைரசமும் பெறுமுன்னர் நாம்


இயேசு எமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்தார் என்பதை விசு வாசிப்போம்.

★ எமது பாவங்களுக்காக மனம் திரும்புவோம்.
★ ஆயத்தமுடன் திருவிருந்தில் பங்குபெறுவோம்.
★ தூய உள்ளத்துடன் இணைந்து செயற்படுவோம்.

தூய திருவிருந்தில் பங்குபற்றி, இயேசுவின் உடலின் பங்குதாரர் என்பதை அறிந்து அவரது பணியை தொடர்ந்தும் செய்வதற்கு எமக்கு பலன் கிடைக்கின்றது.

## II. **சீடர்களின் காலடிகளைக் கழுவுதல் (மத்தேயு 13 : 1 - 20)**

இறுதி திருவிருந்தின் பின்னர் இயேசு பந்தியிலிருந்து எழுந்து தமது மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் எடுத்து சீடர்களின் கால்களைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துணியால் துடைக்கத் தொடங்கினார்.




சீமோன் பேதுரு - ஆண்டவரே நீரா என் காலடிகளைக் கழுவப் போகிறீர்?

இயேசு - நான் செய்வது இன்னதென்று இப்போது உனக்குப் புரியாது பின்னரே புரிந்து கொள்வாய்.

சீமோன் பேதுரு - நீர் என் காலடிகளைக் கழுவ விடமாட்டேன்.

இயேசு - நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கில்லை.

சீமோன் பேதுரு - அப்படியானால் ஆண்டவரே என் காலடிகளை மட்டுமல்ல என் கைகளையும் தலையையும் கூட கழுவும்.

இயேசு - குளித்துவிட்டவர் தம் காலடிகளை மட்டும் கழுவினால் போதும். அவர் தூய்மையாகி விடுவார். நீங்களும் தூய்மையாய் இருக்கிறீர்கள். ஆனாலும் அனைவரும் தூய்மையாய் இல்லை.

காலடிகளைக் கழுவி முடித்த இயேசு தமது மேலுடைகளை அணிந்து கொண்டு பந்தியில் அமர்ந்து

**''ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளை கழுவக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்.''**

**(யோவான் 13:14 - 15)**

மேற்படி முன்மாதிரியின் மூலமாக இயேசு எமக்கு எடுத்துக் காட்டியவை:

தாழ்மையுடன் பணி செய்வதன் முக்கியத்துவம்

★ இறைவன் உயர்வு தாழ்வு பார்ப்பதில்லை.
★ இறைவனுக்கு தலைவர் - பணியாளன் வேறுபாடு இல்லை.
★ மற்றவரைவிட பெரியவர் என எண்ணக் கூடாது.

## III. கெத்சமனே விண்ணப்பம் (மத்தேயு 26 : 36 -46)

இயேசு சீடர்களாகிய பேதுரு, யாக்கோபு,யோவானைக் கூட்டிச் செல்லல்.

ஓரிடத்தில் அவர்கள் நின்றனர்.

அவர் துயரமும் மனக்கலக்கமும் அடைந்தார்.
அவர் கூறிய வார்த்தை
'எனது உள்ளம் மரணம் வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்.'' என்றார்.

இயேசு விண்ணப்பம் செய்வதற்காக சற்று அப்பால் சென்றார்.

முகம் குப்புற விழுந்து விண்ணப்பம் செய்தார்.
விண்ணப்பம். ''என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனால் என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்.'' என்றார்.

அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு
''ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? சோதனைக்கு உட்படாதிருந்து விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள். உங்கள் மனம் ஆர்வமுடையது தான். ஆனால் உடல் வலுவற்றது.

இயேசு மீண்டும் விண்ணப்பம் செய்தார்.

''என் தந்தையே நான் குடித்தாலன்றி இத் துன்பக் கிண்ணம் அகல முடியாதென்றால் உமது திருவுளப்படியே ஆகட்டும்.'' என்றார்.

இயேசு மூன்றாம் முறையாக இறைவனிடம் வேண்டினார்.

இயேசு மீண்டும் விண்ணப்பம் செய்தார்.

பிறகு சீடர்களிடம்

''எழுந்திருங்கள். போகலாம். இதோ! என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி வந்து விட்டான்.'' என்றார்.

இயேசு தமது உயிரை தியாகம் செய்யும் முன்னர் மனிதனாக மனக் கலக்கம் அடைந்தார். இறுதியில் இறை விருப்புக்கு ஒப்படைத்தார். இச் செயலில் இயேசு மனக்கலக்கம் வெளிப்பட இடமளிக்கவில்லை.

**எமது நாளாந்த வாழ்வில்**

★ நாம் எதிர்நோக்கும் சவால்களுக்காக விண்ணப்பம் செய்வோம்.

★ எப்போதும் இறைவிருப்பத்தை அறிந்து கீழ்படிவுடன் செயற் படுவோம்.

★ தாழ்மையுடன் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்வோம்.

★ நாள்தோறும் இறைவனிடம் எம்மை ஒப்புவித்து இறை பராமரிப்பில் பயணம் செய்வோம்.

இயேசு தமது வாழ்வில் பல வேதனைகளை அனுபவித்தார். இறை பலத்தால் அவற்றை எதிர் நோக்கினார். அதேபோன்று சீடர்களின் காலடிகளைக் கழுவியதால் சீடர்களுக்கு இறையரசின் பணியாளராக முன்னுதாரணமாக திகழ்ந்தார். இயேசுவின் முன்மாதிரிகளை நாமும் பின்பற்றி வாழ்வோம்.

**செயற்பாடு**

1. இயேசுவின் துன்புறுதலுக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகளில் நீர் விரும்பும் நிகழ்வு குறித்து சிறு குறிப்பு எழுதுக.
2. துன்புறுதலுக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகளின் ஊடாக நாம் பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகளைக் குறிப்பிடுக.

# 9. சிலுவை மொழிகளின் முன்மாதிரி

**இயேசு சிலுவையில் கூறிய சில வார்த்தைகளைக் கற்று அவை கிறிஸ்தவ வாழ்வுக்கு முன்மாதிரியாக அமையும் முறைகளைக் கண்டுபிடித்தல் இப் பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**லூக்கா 23:34, யோவான் 19:26-27, யோவான் 19:30**



இயேசுவின் சிலுவை மொழிகளில் மூன்றை நாம் கற்போம்.

**''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.'' லூக்கா 23:34**

இது சிலுவையிலிருந்து இயேசு கூறிய முதல் வார்த்தை என்று கிறிஸ்தவ பாரம்பரியம் மூலம் அறிகின்றோம். இதனைக் கற்கும்போது பின்வரும் கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

இயேசு சிலுவையில் வேதனைகளின் மத்தியில் இருந்தாலும் தமக்கு எதிராகத் துன்பம் விளைவித்தவர்கள் மீது கருணை காட்டினார். அவர் பணி செய்த வேளையில் போதித்தவற்றை சிலுவையில் செய்து காட்டினார்.

இது மன்னிப்பு வழங்கலின் உயரிய முன்னுதாரணமாகும்.

இயேசு இவ்வார்த்தைகளைத் தனது விண்ணப்பமாக இறைவனிடம் முன்வைத்தார்.

இயேசு தமது பகைவராகச் செயற்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்குமாறு இறைவனிடம் வேண்டுதல் செய்தார். அவரது கருணை ஊற்று இதிலிருந்து புலப்படுகின்றது.

**இயேசுவின் முன்மாதிரிகையை பின்பற்றி வாழ நீர் ஆயத்தமா ?**

★ உமக்கு எதிரான குற்றங்களை மறக்க
★ அவர்களுக்கு அன்பையும் கருணையும் வழங்க
★ இறைவனிடம் வேண்டுதல் செய்ய
★ அவர்களை முழுமனதுடன் மன்னிக்க

**''அம்மா இவரே உம் மகன் ''  என்றார் பின் தன் சீடரிடம் ''இவரே உம் தாய் '' என்றார் (யோவான் 19:30)**

இது இயேசு சிலுவையில் கூறிய வார்த்தையாகும்.
சிறுவயது முதல் இயேசுவுக்கு யோசேப்பினதும் மரியாளினதும் அன்பும் பாதுகாப்பும் கிடைத்தது. அவர்களுக்கு கீழ்படிந்து நல்ல பிள்ளையாக வாழ்ந்து வந்தார்.

சிலுவையில் அறையப்பட்ட வேளையில் தனது தாயான மரியாவிடம் தன் அன்புச் சீடன் யோவானை ஒப்படைக்கிறார்.
இது உலகம் முழுவதற்கும் முன்மாதிரியான நிகழ்வாகும். இதனூடாக பெற்றோரை தனிமைப்படுத்தக் கூடாது என்ற முக்கிய விடயத்தை உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

நீங்கள் உங்களது பெற்றோருக்கும், பராமரிப்பாளர்களுக்கும்
★ கீழ்ப்படிந்திருத்தல்
★ உதவி செய்தல்
★ கனிவுடன் பேசுதல்
★ சுகவீனத்தில் அன்புடன் பராமரித்தல்
★ பிரச்சினைகள் மத்தியில் உதவி செய்தல்

கிறித்தவ பிள்ளை என்ற முறையில் இறைவன் உம்மிடம் எதிர்பார்ப்பது மூன்றாவது சிலுவை வார்த்தையில் சமூகமயமாக்கல் குறித்த பொறுப்புக்கள் நினைவுறுத்தப்படுவதைக் காணலாம்.

**''எல்லாம் நிறைவேறிற்று.'' (யோவான் 19:30)**

இயேசு தனது பணியை வெற்றியுடன் நிறைவேற்றி முடித்து இந்த வார்த்ததையைக் கூறினார். இறைவனுக்கும், மனிதருக்கும் இடையிலான உறவை மீண்டும் உருவாக்கிட தனது உயிரை ஒப்படைத்தார். ''எல்லாம் நிறைவேறிற்று.'' என்பதில் வெளிப்படும் பொருள் இயேசு தனது உயிரை பெரிதெனக் கருதாது நமது மீட்புக்காக தனது உயிரைக் கொடுத்தார் என்பதாகும்.

இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த வார்த்தையால் பலமடையும் நாம்:

Ø எமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை விண்ணப்பத்துடன் இறைவனிடம் ஒப்படைப்போம்.

Ø இறைவார்த்தையால் பலமடைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

Ø எமது எல்லா கடமைகளையும் முழுமையாகச் செய்து முடிக்க முயல்வோம்.

Ø அனைத்தையும் செய்து முடித்து பின்னர் இறைவனைத் துதிப்போம்.

கிறிஸ்தவ பிள்ளை எனும் வகையில் கல்வியைச் சிறப்புடன் செய்து முடிப்பதுடன் வாழ்வில் எம்மிடம் ஒப்படைக்கப்படும் அனைத்துச் செயல்களையும் வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு இயேசு நாள்தோறும் எமக்கு வழிகாட்டுவாராக.

**செயற்பாடு**

1. இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகளில் மூன்றை எழுதுக.
2. உங்களுக்கு எதிராகக் குற்றம் செய்த ஒருவருக்கு இறைவனிடம் மன்னிப்பு வேண்டி விண்ணப்பம் ஒன்று எழுதுக.
3. இயேசு சிலுவையில் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி 'நாம் எமது பெற்றோருக்கு செய்யக் கூடியவைகள்' என்ற தலைப்பில் சில வசனங்களை எழுதுக.

# 10. எல்லோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு

**மரணத்திலிருந்து உயிர்த்த இயேசுவைச் சந்தித்த தோமாவின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. வாழ்வில் புதியதொரு எதிர்பார்ப்பு தோன்றியது. இதனை எமது வாழ்வில் இணைத்துக் கொள்ளும் வழிமுறைகளைக் கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**யோவான் 20: 24-29**

இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் வரையில் சீடர்களுக்கும் வேறு சிலருக்கும் காட்சியளித்தார். அநேகர் யூதருக்குப் பயந்து எதிர்பார்ப்பு எதுவும் அற்றவர்களாக வாழ்ந்தனர். இயேசு காட்சியளித்தார் என்பதை ஒரு சிலர் நம்பவில்லை.

அவர்களுள் ஒருவர் தோமா

'ஆண்டவரைக் கண்டோம்' என சீடர்கள் கூறியதை தோமா நம்பவில்லை. அவன் சந்தேகம் நிறைந்தவனாக, அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட காயத்தைப் பார்த்து,

**அதில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்.'' என்றார்.**
**யோவான் 20:25**

தோமா உயிர்த்த இயேசுவை,

பார்த்தால் → மட்டுமே விசுவாசிப்பேன் எனக் கூறினான்.
தொட்டுப் பார்த்தால் → மட்டுமே விசுவாசிப்பேன் எனக் கூறினான்.

இதற்கான சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்ததா?



(வாசிப்போம்)
யோவான் 20:26 - 28

**''இதோ என் கைகள் இங்கே விரலை விடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்''**

**தோமா,**

உயிர்த்த இயேசுவின் கைகளையும் விலாவையும் கண்டான்.
உயிர்த்த இயேசுவின் தொனியைக் கேட்டான்.
உயிர்த்த இயேசுவில் அமைதியும் துணிவும் பெற்றான்.
இயேசுவைக் கண்டு சந்தேகத்தை நீக்கி விசுவாசத்தை உறுதிப்படுத்தினான்.
உயிர்த்த இயேசுவில் எதிர்பார்ப்பை நிலைநிறுத்தினான்.
இயேசுவை 'ஆண்டவர் என அறிவித்த முதல் சீடன் தோமா.
**''நீரே என் ஆண்டவர். நீரே என் கடவுள்''** என அறிவித்தான்.

இயேசுவின் உயிர்ப்பானது அமைதியையும் முதலில் விசுவாசிக்காத தோமா இயேசுவைச் சந்தித்த பின்னர் அவர் உயிருடன் வாழும் கடவுள் என்பதை விசுவாசித்தான். அதுமட்டுமல்ல இயேசுவை ஆண்டவர் என பயமின்றி சான்று பகர்ந்தான்.

**எமது வாழ்வில்**

சந்தேகம் உதயமாகும் வேளை
சவால்களை சந்திக்கும் வேளை
தோல்விகளை அடையும் வேளை
வேதனையுடன் பயணிக்கும் வேளை

இயேசுவின் உயிர்ப்பானது அமைதியையும் சமாதானத்தையும் துணிவையும் எமக்கு அளிக்கின்றது.

உயிர்த்த இயேசுவை
- உங்கள் வாழ்வில் ஏற்றுக் கொள்ளுங்கள்.
- ஒரே கடவுள் என்று விசுவாசியுங்கள்.
- இறைவார்த்தையால் காண சமீபமாகுங்கள்.
- ஜெபத்தின் மூலம் அவரிடம் உரையாடுங்கள்
- நற்செய்தியைப் பிறருக்கு அறிவியுங்கள்

அப்போது

**"காணாமல் நம்புவோர் பேறு பெற்றோர்."**
**யோவான் 20:29**

உயிர்த்த இயேசுவில் எமது வாழ்வைப் புதுப்பித்து மகிழ்வுடனும் துணிவுடனும் வாழ்வோம்.

**உயிர்த்த இயேசு அனைவரது வாழ்வையும் புதுப்பித்து மலர செய்கின்றார்.**

**செயற்பாடு**

1. இயேசு தோமாவுக்குக் காட்சியளித்த நிகழ்வை உரையாடலாக முன்வையுங்கள்.
2. "உயிர்த்த இயேசுவில் எதிர்பார்ப்புக்கள்" என்ற தலைப்பை உமது நண்பனுக்கு விபரித்து எழுதுக.

# 11. தூய ஆவியில் புத்தொளி

**பெந்தகொஸ்தே நிகழ்வை திருத்தூதர் பணி நூலிலிருந்து விபரமாகக் கற்று எமது வாழ்வுக்குக் கிடைக்கும் புத்தொளியை அடைதல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**திருத்தூதர் பணி 2: 1-13**

பெந்தெகொஸ்தே நாள் நிகழ்வைக் கண்ட ஒருவர் தனது நண்பனுக்கு எழுதிய கடிதம்.

அன்பான நண்பா,

நீர் தற்போது இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளதை அறிந்து மகிழ்வடைகின்றேன். அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

நீர் அன்று பெந்தெகொஸ்தே நிகழ்வைக் குறித்து வினவியது ஏன் என்று எனக்குப் புரிகின்றது. இந் நிகழ்வானது எனது ஆரம்பகால வாழ்வை முழுமையாக மாற்றுவதற்கு உறுதுணையாக இருந்தது.

அன்று ஒருநாள் நாம் எல்லோரும் எருசலேம் நகரில் கூடியிருந்தோம். திடீரென்று கடும் காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி நாம் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. நாம் வெவ்வேறு மொழிகளில் பேசினோம். கலிலேயராகிய நாம் பேசும் மொழி கேட்டு அனைவரும் புதுமை அடைந்தனர் .

கடவுளின் மாபெரும் செயல்களை பேசக் கேட்கிறோம் என ஆச்சரியம் கொண்டனர் .
இதுவரையில் பயத்துடன் பதுங்கி இருந்த சீடன் பேதுரு எழுந்து உரத்த குரலில் அருளுரை ஆற்றினார். இறைவாக்கினர் யோவேலின் இறை வாக்கு நிறைவேற்றப்பட்டது எனவும் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் எனவும் குறிப் பிட்டார். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். உனக்குள்ளும் தூய ஆவியானவர் வாசம் செய்கின்றார் என நான் விசு வாசிக்கின்றேன். உனது வாழ்வானது தூயாவியில் புதுப்பிக்கப்பட்டு புத்தொளியுடன் மலர எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். உனக்காக நான் ஜெபிக்கின்றேன்.

இவ்வண்ணம்,
உனது அன்பு நண்பன்,
ஆனந்தன்.

## தூய ஆவியின் வருகை

*பின்னணி -*

தினம் - யூத பாஸ்கா விழாவின் 50 நாட்களுக்கும் பின் பெந்தெகொஸ்தே விழா கொண்டாடப்படும். இந்நாளில் அறுவடையின் முதற் பலனை ஆண்டவருக்கு செலுத்துவர் . இது பழைய காலம் தொட்டே இஸ்ரயேலரில் இடம்பெற்றுவரும் விவசாய விழாவாகும். லேவியர் 23:16

இடம் - எருசலேம்

கூடியிருந்தவர்கள் - புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சீடர்கள், பன்னிரு சீடர், பல நாட்டு மக்கள், பலமொழி பேசும் யூத மக்கள்

சீடர்களின் நிலை - யூதருக்குப் பயந்து கதவுகளை மூடி வாழ்ந்த காலம்.

***பெந்தெகொஸ்தே நாளில் தூயாவியின் வருகை திருத்தூதர் பணி 2: 1– 4***



பெந்தெகொஸ்தே நாளில் தூய ஆவியின் வருகை இடம்பெற்றது. பழைய ஏற்பாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனி நபருக்கும் பெந்த தெகொஸ்தே நாளில் கூடியிருந்த சீடர்களுக்கும் தூயாவியானவர் இறங்கினார்.

## I. கடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல்

பழைய ஏற்பாட்டில் மற்றும் புதிய ஏற்பாட்டில் தூய ஆவியானவரின் செயல் காற்றின் செயலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது. காற்று வீசுதல் போன்ற இரைச்சல் போன்று மிக வல்லமையுடன் தூய ஆவியானவர் வந்திறங்கினார்.

## II. நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள்

இறைவனின் வருகை தொடர்பாகத் திருமறையில் பாவிக்கப்பட்ட இன்னுமொரு சொல் 'நெருப்பு' என்பதாகும். மோசே எரியும் முட் செடியிலிருந்து அழைக்கப்பட்டார். எகிப்திலிருந்து விடுதலைப் பயணம் செய்த எபிரேய மக்களுக்கு இரவு காலத்தில் 'நெருப்புத் தூண்' வழி காட்டியது. பெந்தெகொஸ்தே நாளில் ''நெருப்புப் போன்ற நாவுகள்'' என்பதிலிருந்து கருதப்படுவது பயமின்றி சான்று பகரத் தேவையான வல்லமையை இறைவன் அளித்தார் என்பதாகும்.

III. **நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.**

*பெந்தெகொஸ்தே நாளில் ''நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள்'' அங்கு கூடியிருந்த சீடர்கள் மீது வந்து அமர்ந்தது எனத் திருத்தூதர் பணி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தூய ஆவியானவரின் வருகையும் வல்லமையும் எனக் கருதப்படுகின்றது. சீடர்கள் மத்தியில் தூயாவியானவர் இறங்கி அவர்களுடன் வாசம் செய்கின்றார்.*

IV. **பிற மொழிகளில் பேசுதல்**

*சீடர்கள் தூய ஆவியின் வல்லமையால் பிறமொழிகளில் பேசினர். அவர்கள் கலிலேயாவில் வாழ்ந்த சாதாரண மக்களாக இருந்தாலும் வல்லமையுடன் பிற மொழிகளைப் பேசினர்.*

V. **சீடர்கள் பேசிய பிற மொழி தமது தாய்மொழியில் பிறருக்கு விளங்குதல்**

*இதிலிருந்து சீடர்கள் பிறமொழி பேசினாலும் அங்கு கூடியிருந்தவர்கள் அதனை தங்கள் மொழிகளில் கேட்டனர். இது தூய ஆவியானவரின் வல்லமை நிறைந்த செயலாகும்.*

VI. **இறைவனின் வல்லமையான செயலை அறிவித்தல்**

*பிற மொழி பேசியதிலிருந்து சீடர்கள் இறைவனின் மாபெரும் செயலை அறிவித்தனர். (தி.ப. 2:11) இயேசுவின் மரணத்தின் பின்னர் சீடர்கள் மறைந்து வாழ்ந்தனர். தூய ஆவியின் வல்லமையான செயலால் துணிவும் பலமும் பெற்றனர்.*

**தூய ஆவியானவரால் நாம் பெறும் புதுவாழ்வு**

*பல இடங்களுக்கும் பரவிச் சென்ற சீடர்கள் பெந்தெகொஸ்தே நாளில் பலமடைந்தனர். அவர்கள் பயமின்றித் துணிவுடன் உறுதியாக இயேசுவுக்குச் சான்று பகர்ந்தனர். அவர்களது வாழ்வில் புத்தொளி பெற்றனர். புதுவாழ்வு மலர்ந்தது.*

இன்றும் நாம் தூய ஆவியானவரின் வல்லமையால் நிரப்பப்பட வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கின்றார். அப்போது நாம் பயம் நீங்கி சான்று பகர்வோம். அப்போது எமது வாழ்வில் புத்தொளி பிறந்து புதுவாழ்வு மலரும். அதற்காக நாம் எமது வாழ்வை இறைவனிடம் ஒப்படைப்போம்.

**செயற்பாடு**

1. பெந்தெகொஸ்தே நிகழ்வை ஒழுங்குபடுத்தி எழுதுக.
2. தூய ஆவியானவரின் வழிகாட்டலை வேண்டி விண்ணப்பம் ஒன்று எழுதுக.

# 12. ஆரம்பக் கிறிஸ்தவ சபை

**தூய ஆவியின் துணையுடன் பலம் நிறைந்த ஒரே குழுவாக முன்மாதிரியுடன் செயற்பட்ட ஆரம்பக் கிறிஸ்தவ சபையில் சீடர்களின் வாழ்வு எமக்கு முக்கியமான வழிகாட்டலாக அமையும் முறைகளைக் கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**திருத்தூதர் பணி நூல் 2:37-47**


'திருச்சபை' என்பதை அறிமுகம் செய்யும்போது எமது சிந்தனையில் தோன்றுவது திருச்சபையின் கட்டடம் ஆகும். அது விசுவாசிகள் ஒன்று கூடும் இடமாகும். ஆனால் திருச்சபை என்பது, தூய ஆவியின் வல்லமை பெற்று விசுவாசத்துடனும் இறை பயத்துடனும் சான்று பகரும் கூட்டமாகும்.

ஆரம்பத் திருச்சபை தூய ஆவியின் துணையுடன் தோன்றியது. பெந்தெகொஸ்தே நாளில் சீடர்கள் தூய ஆவியின் கொடையைப் பெற்றனர். அதன் பின்னர் அவர்களது வாழ்வில் விசேட மாற்றங்கள் ஏற்பட்டன. அன்று பேதுரு ஆற்றிய அருளுரையை கேட்ட மூவாயிரம் பேரளவிலான மக்கள் சபையில் சேர்ந்தனர். அவர்கள் மனம் திரும்பி இயேசுவின் நாமத்தில் திருமுழுக்குப் பெற்றனர்.

இவ்வாறாக நாள்தோறும் வளர்ந்து வந்த கிறிஸ்தவ சபையின் விசுவாசிகள் இடையே காணப்பட்ட பண்புகளை ஆராய்வோம்.

**ஆரம்ப திருச்சபை மக்களின் பண்புகள்**

மேற்படி மாதிரி உருவுக்கு அமைய சபையானது இயேசுவில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. சபையைப் போஷிப்பவர் தூய ஆவியானவர்.



**போதனை**

யூதர்கள் தொழுகைக் கூடங்களில் கூடி இறைவார்த்தைகளைக் கற்று பயில பழக்கப்பட்டிருந்தனர். அதற்கு அவர்களுடன் மறைநூல் அறிஞர் மற்றும் தொழுகைக்கு கூட தலைவனின் ஒத்துழைப்புக் கிடைத்தது. பெந்தகொஸ்தே நாளில் தூய ஆவியின் கொடை கிடைத்த சீடர்கள் ஆர்வமுடன் போதனை செய்தனர். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தனர்.

**நட்புறவு**

ஆரம்ப திருச்சபையினர் திருத்தூதர்களின் (அப்போஸ்தலர்) தலைமைத் துவத்துவத்தின் கீழ் கூடினர். அவர்களுக்குக் கிடைத்த போதனைக்கு ஏற்ப ஒன்றிணைந்து ஒரே மனதுடன் புதுவாழ்வுக்குப் பழக்கப்பட்டனர். இது அவர்கள் மத்தியில் வளர்ந்து பொது வாழ்வு நடத்தைக் கோலமாக வளர்ச்சி அடைந்தது.



**அப்பம் பிட்குதல்**

ஆரம்ப திருச்சபையில் திருத்தூதரும் விசுவாசிகளும் வீடு வீடாகச் சென்று அப்பம் பிட்குதலில் ஈடுபட்டனர். அதேபோன்று மகிழ்வுடனும் தியாக மனதுடனும் உணவைப் பகிர்ந்து உண்டனர். இது அவர்களது ஒன்றிப்பு வாழ்வை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு அப்பம் பிட்குதல் பிற்காலத்தில் ஆண்டவரின் திருவிருந்தாக இடம்பெற்றது. 1 கொரிந்தியர் 11:23 – 26

**உடைமைகளை பொதுவாக வைத்தல்**

இது ஆரம்ப திருச்சபையின் விசேட பண்பாகும். கிறிஸ்துவைப் பின் பற்றியவர்களாக செல்வந்தரும் வறியவரும் காணப்பட்டனர். அவர்கள் உடைமைகளை விற்று திருத்தூதரின் பாதத்தில் வைத்தனர். இந் நிகழ்வு ஒருவருக்கொருவர் இடையே அன்பையும் உறவையும் வளர்த்தது. இந்த வாழ்வு முறையால் எவருக்கும் குறைவு ஏற்படவில்லை.

**விண்ணப்பம்**

ஆரம்ப திருச்சபையில் காணப்பட்ட விசேட குணம் ஜெபம் செய்தல் ஆகும். யூதர் தமது பாரம்பரிய வழக்கப்படி குறிப்பிட்ட நேரங்களில் ஜெபம் செய்தனர். (தி.ப. 3:1) ஆனாலும் ஆரம்பத் திருச்சபையானது ஆரம்ப முதல் எப்போதும் ஜெபத்தில் இணைந்திருந்தது.

மேற்படி பண்புகள் கொண்டிருந்த ஆரம்ப திருச்சபையானது மிக விரைவாக வளர்ந்து வந்தது.

அவ்வாறு வளர்ச்சி அடைந்த திருச்சபையில் பின்வரும் விசேட பண்புகள் காணப்பட்டன.

- Ø ஒவ்வொருவருக்குள்ளும் இறைபயம் இருந்தது.
- Ø திருத்தூதர் அற்புதங்களைச் செய்தனர்.
- Ø மீட்பு பெற்றவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்தது.

**ஆரம்ப திருச்சபை மூலம் எமக்குக் கிடைக்கும் முன்மாதிரிகள்**

கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நாம் நாள்தோறும் இறைவனைச் சார்ந்து வாழ வேண்டும். ஜெபத்தாலும் இறைவார்த்தைகளாலும் மட்டுமே அவரிடம் சமீபித்து வாழ முடியும். கிறிஸ்தவ சமயமானது ஒருமைப்பாட்டுடன் அனுபவத்தில் காணும் விசுவாசமாகும். இது சபையாக வளர வேண்டுமென இறைவன் எதிர்பார்க்கின்றார்.

நாம் கிறிஸ்தவ வழிபாட்டைப் பாரம்பரியமாக மட்டுமல்ல அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் ஈடுபட வேண்டும். ஆரம்ப திருச்சபை தூய ஆவியில் செயற்பட்டு திருப்பொழிவு பெற்று இணைந்து வாழ்ந்து வழிகாட்டியமை எமக்கு முன்மாதிரியாக அமைகின்றது. ஒன்றிணைந்து வழிபடும் சபைகளில் தூய ஆவியானவர் வல்லமையுடன் செயற்படுகின்றார்.

**செயற்பாடு**

1. ஆரம்ப திருச்சபையில் காணப்பட்ட பண்புகளை எழுதுக.
2. வழிபாட்டுக்கான ஒன்று கூடலின் முக்கியத்துவத்தை எழுதுக.

# 13. குணமளிக்கும் இறைவன்

**பேதுருவும் யோவானும் அவர்களது பணியின் ஆரம்பத்தில் கால் ஊனமுற்றிருந்த ஒருவரைக் குணமாக்கிய நிகழ்வைக் கற்போம். இறைவன் குணமளிப்பவர் என்பதை அறிதல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**திருத்தூதர் பணி நூல் 3:1-10**

திருத்தூதர் பணி நூலில் காணப்படும் பேதுருவும் யோவானும் குணமாக்கிய முதல் நிகழ்வை நோக்குவோம். இருவரும் எருசலேம் ஆலயத்தில் இறை வேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் 3.00 மணிக்கு இறை வேண்டலுக்காகச் சென்றனர்.

கோவிலின் 'அழகு வாயில்' எனும் இடத்தில் நோயாளரும் பிச்சைக் காரரும் இருந்தனர். அவர்கள் கோவிலுக்குள் செல்பவர்களிடம் பிச்சை கேட்டனர்.

இந் நிகழ்வில் குறிப்பிடப்படும் கால் ஊனமுற்றவர் பிறப்பிலிருந்தே நடக்க முடியாதவராக இருந்தார். அவர் பேதுருவும் யோவானும் கோவிலுக்குள் சென்று கொண்டிருக்கும் போது அவர்களிடம் பிச்சை கேட்டார்.

பேதுருவும்யோவானும் **''எங்களைப் பார்''** என்று கூறினர்.

''வெள்ளியும் பொன்னும்
என்னிடமில்லை.
என்னிடம் உள்ளதை
உமக்குக் கொடுக்கிறேன்.
நாசரேத்து இயேசு
கிறிஸ்துவின் பெயரால்
எழுந்து நடந்திடும்.''
(தி.ப. 3:6)



சீடர்கள் ஊனமுற்றவருக்குப் பணம் கொடுத்திருந்தால் அது சில தினங்களில் முடிந்து விடும். நாம் பிறருக்கு உதவி செய்தல் அவசியம் இறைவன் எமக்குத் தந்துள்ள தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

தூயாவியின் வல்லமையால் பேதுரு ஊனமுற்றவரின் வாழ்வுக்குத் தேவையானதை அளிக்க முன்வந்து ஓர் அரும் அடையாளத்தைச் செய்தார். அது இறைவன் தரும் சுகம் ஆகும். பேதுரு இச் சந்தர்ப்பத்தில் இயேசுவின் நாமத்தில் பின்வருமாறு கட்டளையிட்டார்.

**''இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்.''** எனக் கூறி அவரது வலக்கையை பிடித்துத் தூக்கிவிட்டார். அவர் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார். அவர் கூறியது ஒரு சில வார்த்தைகள் மட்டுமல்ல; அவரிடம் தூய ஆவியின் வல்லமை காணப்பட்டது. ஊனமுற்றவரின் காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவன் சுகம் அடைந்தான்.

**ஊனமுற்றவரின் பிரதிச்செயல்**

அவன் குணம் பெற்றவுடன் காட்டிய பிரதிச்செயலை ஆராய்வோம். துள்ளி நடந்து கடவுளைப் போற்றினான். வாழ்நாளில் ஒருபோதும் சென்றிராத கோவிலுக்குள் சென்று கடவுளைப் போற்றினான்.

மேற்படி நிகழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன?

- Ø இயேசு எமது பாவங்களுக்கு மன்னிப்பும் நோய்களுக்கு சுகமும் வாழ்வுக்கு மகிழ்வையும் வழங்குகின்றார்.
- Ø இயேசுவின் குணமாக்குதலை விலை கொடுத்து வாங்க முடியாது.
- Ø இயேசு ஆரம்பித்த பணியை தூயாவியானவர் முன்னெடுத்துச் செல்கிறார்.
- Ø இயேசு தனது சீடர்கள் மூலம் நற்செய்திப் பணி செய்கிறார்.
- Ø திருத்தூதரின் குணமாக்கல் பணியில் தூய ஆவியானவர் செயற்பட்டார்.
- Ø எமக்குத் தேவையான உடல், உள, ஆன்மீக சுகத்தை அவர் எமக்குத் தருகின்றார்.

**சிந்திப்போம்**

நாம் சுகம் பெறவும் நாம் சுகம் வழங்கவும் விசுவாசத்துடனும் அன்புடனும் ஜெபம் செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்யும்போது தூய ஆவியானவர் பலம் அளிப்பார்.

பேதுருவும் யோவானும் அவர்களது பலத்தால் அல்ல. இயேசுவின் நாமத்தில் நம்பிக்கை வைத்தனர்.

நாம் தூய ஆவியின் வல்லமையால் கிடைக்கும் குணமடைதலில் ஆழ்ந்த விசுவாசம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

எமது வாழ்வில் தூய ஆவியின் வழிநடத்தலுக்கு இடமளிப்போம்.

**செயற்பாடு**

1. ‘அழகு வாயில்’ எனுமிடத்தில் ஊனமுற்றவர் குணமடைதல் நிகழ்விலிருந்து நீர் கற்றுக்கொண்ட விடயங்கள் 5 எழுதுக.
2. சுகயீனமுற்றிருக்கும் உமது நண்பருக்காக நீர் ஏறெடுக்கும் வேண்டுதல் ஒன்றை எழுதுக.

# 14. இறைவார்த்தையைப் பின்பற்றுவோம்.

**இயேசுவின் போதனைகளில் மலைப்பொழிவில் காணப்படும் செய்தியானது நமது வாழ்விற்குப் பெரிதான சக்தியைத் தருகின்றது அப்போதனையில் சிலவற்றைக் கற்பதே இப் பாடத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.**

**மத்தேயு:5:43-48 6:5-15 7:24-29**

### *பகைவரிடம் அன்பாயிருத்தல்*

**உரையாடலுக்கு செவிமடுப்போம்**

சாந்தி - ஏன் இன்று நேரத்தோடே வேலைக்குச் செல்வதற்கு ஆயத்த மாகின்றீர்?

குமார் - ஆ..சாந்தி நான் உமக்குச் சொல்வதற்கு முடியாமல் போயிற்று அது என்னவென்றால் எங்கள் வேலைத்தளத்தில் எனக்குத் தொல்லைதரும் ரவியின் பிள்ளைக்கு கடுமையான வருத்தம் இன்னும் வர அவர் மன தளவில் நன்றாகப் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு வேண்டும். ரவியின் பிள்ளையின் சுகயீனத்தால் அவர் சில நாட்களுக்கு வேலைக்குக்கூட வருவதற்கு முடியாமல் போகும் என நான் நினைக்கின்றேன். என்னைத் தொல்லைப்படுத்தியதற்கு அவருக்கு இதுமட்டும் போதாது.

சாந்தி - ஐயோ பாவம்! குமார் நீர் ஏன் அம்மனிதனின் துன்பத்தில் சந்தோஷப்படுகிறீர் பகைவனாய் இருந்தாலும் அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்வதே உம் விருப்பமாக இருக்கவேண்டும். பிள்ளையைச் சென்று பார்க்கவேண்டும் அவர்களுக்காக ஜெபம் செய்யவேண்டும். நீ இவ்வாறு மனிதர்களைப் பகைவர்களாய் எண்ணுவீர் என்று நான் நினைக்கவேயில்லை.

குமார்- எங்கள் வேலைத்தளத்தில் நடப்பவைகள் உமக்குத் தெரியாது. அங்கே இருப்பவர்கள் பொய்யாக, தவறாக பலவற்றை மேல் அதிகாரிகளுக்குக் கூறி என்னைப் பிரச்சனைகளில் சிக்க

வைக்கின்றனர். இதில் தலைமை வகிப்பவர் இந்த ரவிதான். அவரால் நான் எந்நாளும் முன்னேறாமல் ஒரே நிலையில் இருக்கின்றேன். எனக்கு எதிராக செயற்பட்டு எனக்குப் பின் வந்தவர்கள் உயர்பதவியில் இருக்கிறார்கள்.

சாந்தி- குமார் நீர் நேற்று ஆலயம் சென்று போதனைக்குச் செவி கொடுத்தாய் அல்லவா? இயேசு எமக்கு என்ன செய்யும்படி கூறியுள்ளார்? உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.
என்றல்லவா? எனவே நீரும் உனக்கு இருக்கும் பிரச்சனைகள் துன்பங்கள் மத்தியில் உம் பகைவர்களுக்காக இறைவனிடம் மன்றாடு. அவர்களின் மனதை மாற்ற வேண்டுமென நீ இறை வனிடம் வேண்டிக்கொள்.

குமார்- நீ என்னைப் புரிந்துகொள்ளவில்லை சாந்தி. நான் கோப மாயிருப்பது என்னோடு வேலைத்தளத்தில் இருக்கும் இரண்டு மூன்று பேர்களோடுதான். நீ கூறுவது போல் எனக்குப் பெரிய விரோதிகள் இல்லை. எனக்கு உதவி செய்வோரோடு நான் நன்றாக இருப்பேன். அவர்களுக்கு நானும் உதவி செய்வேன்.

சாந்தி - திருமறை என்ன சொல்லுகிறது? உங்களோடிருப்பவர்களுக்கும் உங்களுக்கு உதவி செய்யும் உங்கள் சகோதரர்களுக்கும் மாத்திரம் அன்பு செய்யுங்கள் என்றல்ல. மாறாக, உங்கள் பகைவரிடமும் அன்பாக இருங்கள் என்பதாகும். எனவே, அவர்களின் மனதை மாற்றும்படி இறைவனிடம் வேண்டிக்கொள். இன்று நீ வேலைக்குச் செல்லும் முன் இந்த திருமறைப்பகுதியை வாசித்து ஜெபித்துவிட்டுச் செல். நிச்சயமாக உன் வாழ்க்கையில் ஆறுதல் கிடைக்கும்.

வாசிப்போம்
**மத்தேயு 5:43-48.**

**எங்களுடைய பகைவர்களாக நாங்கள் கருதுபவர்கள் யாவர்?**

- ★ எங்களுக்கு பிரச்சனைகளை உருவாக்குபவர்களா?
- ★ எங்கள் குடும்பத்தையும், மதத்தையும், இனத்தையும் சேராதவர்களா?
- ★ எங்களோடு இருந்துகொண்டே எங்களுக்குத் தெரியாமலே எங்களை தொல்லைகளுக்கும் துன்பத்துக்கும் உட்படுத்துபவர்களா?
- ★ எங்கள் சிந்தனைகள், செயல்கள், கருத்துகளுக்கு இணங்காதவர்களா?
- ★ எங்களது செல்வத்திலும், உடைமைகளிலும் பொறாமை கொள்பவர்களா?

சிந்திப்போம்.

இயேசு இவ்வாறு கூறுகின்றார்.

**''உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூருவாயாக, பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக்கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள் ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்.**

**''உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்**

**உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.**

**மத்தேயு 5:43-44.**

**உங்களைப் பகைக்கின்றவர்களுக்கு நீங்கள் என்ன செய்யலாம்?**

- ★ துன்பம் செய்கிறவர்களை அறிந்து அவர்களுக்காக வேண்டுதல் செய்தல்.
- ★ பகைவரால் துன்பம் ஏற்படும்போது அதற்கு எதிராக செயற்படாதிருத்தல்.
- ★ பகைவரை அன்பு செய்வதற்குத் தேவையான பெலத்தைத் தருவதற்கு வேண்டுதல் செய்தல்.

- ★ துன்பம் வந்தாலும் நன்மைக்கே என எண்ணி செயற்படுதல்.
- ★ இறை பிள்ளைகளாக உலகிற்கு முன்மாதிரியாக நடத்தல்.
- ★ பகைவரை அன்பு செய்வது சாதாரண வாழ்வில் மிகவும் கடினமான காரியமாக இருந்தாலும் அதை நிறைவேற்றுதல்.

**இறைவேண்டல் பற்றிய படிப்பினை.**

வாசிப்போம்
**மத்தேயு 6:5-15.**

*நீங்கள் இறைவனிடம் வேண்டுதல் செய்யும்போது சரியான முறையில் மன்றாடுவதைப் பற்றி இயேசு பின்வருமாறு கற்பித்துள்ளார்.*

- *வெளி வேடக்காரரைப் போல இருக்கவேண்டாம்.*
- *மக்கள் பார்ப்பதற்காக அல்ல உள்ளறைக்குச் சென்று கதவை அடைத்து மறைவாய் உங்கள் தந்தையிடம் வேண்டுங்கள்.*
- *மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டு போகவேண்டாம்.*

**''நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை**
**உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்''**
**மத்தேயு:6:8**

*கிறிஸ்தவ பிள்ளையாக நாம் இறைவேண்டுதல் செய்ய வேண்டிய முறையை இயேசு இவ்வாறு கற்பித்தார்.*

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே
உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக!
உமது ஆட்சி வருக!
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல
மண்ணுலகிலும் நிறைவேறுக!
இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை
நாங்கள் மன்னித்துள்ளது போல
எங்கள் குற்றங்களை மன்னியும்
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்
தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். **மத்தேயு 6:9-13**

இயேசு கற்பித்த இறைவேண்டலில் காணப்படும் பொதுவான பண்புகளான விண்ணபித்தலும் கடமையும் காணப்படுகின்றது.

**விண்ணப்பித்தல்**

- ★ எங்களுக்கு வேண்டிய நாளாந்த உணவு
இறைவன் எமது உடலுக்கும், ஆன்மாவிற்கும் தேவையானதை வழங்கி எங்களைப் போஷிக்கின்றார்.

- ★ எங்கள் குற்றங்களுக்கு மன்னிப்பு
எம்மை அளவிற்கதிகமாக அன்பு செய்யும் இறைவன் எங்கள் குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குகின்றார்.

- ★ சோதனைக்கு உட்படுத்தாமல் தீயோனிடமிருந்து எங்களை விடுவித்து
சமூகத்தில் நிலவும் பலவித சோதனைகளின் முன்னிலையில் சோர்ந்து போகாமல் சரியானவற்றை செயற்படுத்துவதற்கு அவர் எமக்கு பெலத்தைத் தருகிறார்.

இயேசு கற்பித்த வேண்டுதல் பற்றிய பொதுப்பண்பானது தன்னலமாக ‘‘எனக்கு’ என்றல்ல பொதுநலமாக ‘‘எங்களுக்கு’’ என வேண்டுதல் செய்வதாகும்.

**எமது கடமை**

- ★ எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களுக்கும் மன்னிப்பு உரித்தாகின்றது என்பது
- ★ எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. அவ்வாறே நாம் ஒவ்வொருவரையும் மன்னிக்கும் போது எமது குற்றங்களுக்கும் இறைவனிடம் மன்னிப்பு உரித்தாகின்றது.

நாம் **மன்னிப்புப் பெறுவதற்கும் மன்னிப்பு வழங்கவும்** ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. நாம் மன்னிப்பை உரிமையாக்கிக் கொள்வதற்கு, நமது செயற்பாடுகளின் பங்களிப்பும் இருக்கின்றது என்பதை உணர்த்துவதற்காக இது நிபந்தனையாக முன்வைக்கப்பட்டது.

## இருவகை அடித்தளங்கள்

வாசிப்போம்
**மத்தேயு 7:24-29.**

*கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை விசுவாசமாகும். விசுவாசத்தில் வல்லமையடைய கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நாம் இறை வார்த்தையைக் கற்று, அதனைத் தியானிக்கவேண்டும். அதன்படி எமது வாழ்வைச் சீராக்கிக்கொள்ள வேண்டும். எமது வாழ்க்கைப் பயணத்தில் துன்பத்திலும் இன்பத்திலும் கடவுளோடு விசுவாசத்துடன் நிலைத்திருப்பது அவசியமாகும். விசேடமாக துன்பம், கவலைகள் மத்தியில் வாழ்வை முன்னெடுத்துச் செல்லும்போது சமுதாயத்தில் பலவித தாக்கங்களுக்கு உட்பட்டாலும் சோர்ந்து போகாமல் இறைவார்த்தைக்கு ஏற்ப எமது வாழ்வைச் சீர்செய்து கொள்ளவேண்டும் என்பதை இயேசு பின்வருமாறு கூறுகின்றார்.*

**''ஆகவே நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழைபெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது பெருங்காற்று வீசியது அவை அவ்வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை ஏனெனில் பாறையின் மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது''.**

**மத்தேயு 7:24-25**

*மேலும் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டாலும், அதனை மறந்து அதற்கு எதிராக செயற்படும்போது, விசுவாசம் தளர்ந்து, விசுவாசம் அற்றவர்களாயிருப்போருக்கு இயேசு கூறுவதாவது,*

**''நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும்மணல்மீது தம் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்தது; ஆறு பெருக்கெடுத்து ஓடியது; பெருங்காற்று வீசியது. அவை அவ்வீட்டைத் தாக்க அது விழுந்தது. இவ்வாறு பேரழிவு நேர்ந்தது.''**

**மத்தேயு 7:26-27.**

கிறிஸ்தவராகிய நீர் பாறை மீது தம் வீட்டைக்கட்டிய அறிவாளிக்கு ஒப்பானவராக இருக்கவேண்டும். இறை வார்த்தையைக் கேட்டு அதனை ஏற்று நடக்கும் பிள்ளைகளாக இருக்கவேண்டும். ஏனெனில் இறைவார்த்தையில் வாழும் நாம், எமது வாழ்வை இறைவார்த்தையால் பெலனடையச்செய்யவேண்டும். இயேசுவின் போதனையால் உறுதி யடையும் நாம் அதை எமது வாழ்விற்கு ஏற்றதாக்கி இறையரசின் பெறுமதியை முன்மாதிரியாகக் கொண்டு நல்விழுமியங்கள் கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் பங்கு கொள்வோம்.

**செயற்பாடு**

1. உங்களைத் துன்புறுத்துவோருக்காக நீர் செய்யும் இறைவேண்டலை எழுதுக.

2. உமது வகுப்பில் தேவை இருக்கும் நண்பருக்கு உம்மால் செய்யக்கூடிய உதவிகள் மூன்று எழுதுக.

# 15. திறமைகளை இறை மகிமைக்காக பயன்படுத்துதல்

**பத்து மினா நாணயங்கள், காணமற்போன ஆடு போன்ற உவமைகளுக்கூடாக நாம் பெற்றுக்கொள்ளும் இறை ஆசீர்வாதத்தின் பெறுமதிகளும் மனந்திரும்புதலின் முக்கியத்துவமும் வெளிப்படுகின்றது. இயேசுவின் இந்த கற்பித்தலினூடாக நாம் பெறும் இறைசெய்தியை விளங்கிக்கொண்டு அதை வாழ்விற்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வதை ஆராய்ந்து பார்ப்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

**லூக்கா 19:11-27; 15:1-7**


இயேசு தனது கற்பித்தலுக்காகப் பயன்படுத்திய எளிமையான உவமைகள் பாமரமக்கள் இடையே அன்று மிகவும் பிரபல்யமாய் இருந்தது. அதில் காணாமற்போன ஆடு, பத்து மினா நாணயங்கள் பற்றிய உவமைக் கதைகளை கிறிஸ்தவர்கள் அன்று மிகவும் ஆவலோடு கேட்டும் வாசித்தும் வந்தனர்.

**காணமற்போன் ஆட்டின் உவமை**

இங்கு ''ஆடு'' எனக் கருதப்படுவது கிறிஸ்தவர்களையும், 'ஆயர்'' எனக் கூறப்படுபவர் இயேசுவையும் ஆகும்.

**ஆடுகள் - கிறிஸ்தவரின் விசுவாசிகள்**

**ஆயர் - இயேசு கிறிஸ்த்து**



ஆடுகளான நாம் ஒரே மந்தையில் ஒரே ஆயரின் கீழ் இருப்பது இறை தந்தையின் விருப்பம் ஆகும். மந்தையில் ஒன்றாக இருக்கும் ஆடுகளுக்குக் கூட்டாகப் பொறுப்புகளுண்டு. துன்பம் ஏற்பட்டாலும் இன்பம் ஏற்பட்டாலும் அதனைக் கூட்டாகவே அனுபவிக்க வேண்டும். அவை அனைத்திலும் எமது மந்தையானது நல் ஆயரின் கீழ் இருப்பதால் அவரின் பாதுகாப்பும் பெலனும் எமக்குண்டு.

நாம் அவரின் மந்தையின் ஆடாக இருந்தும் அவற்றில் இருந்து பிரிந்து தனித்தனியாக எமது எண்ணப்படி செல்லும் போதே பிரச்சினைகள் எமக்கு ஏற்படுகின்றன. நாம் மந்தையை விட்டுத் தனியாகப் பயணிப் பதற்குத் தீர்மானம் எடுக்கும்போது பாவச் செயல்களுக்கு இட்டுச் செல்லும் சிந்தனை எமக்கு உருவாகின்றது. அவ்வாறான சிந்தனையோடு செல்லும்போது நாம் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் என்பதை காணமற்போன ஆட்டின் மூலம் இயேசு எமக்குக் காண்பிக்கின்றார்.

**''உங்களுள் ஒருவனிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணாமற்போனால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பாலைநிலத்தில் விட்டுவிட்டு காணாமற் போனதைக்கண்டுபிடிக்கும் வரை தேடிச் செல்ல மாட்டாரா? கண்டு பிடித்ததும் அதை அவர் மகிழ்ச்சியோடு தம் தோள்மேல் போட்டுக்கொள்வார் வீட்டுக்கு வந்து நண்பர்களையும் அண்டைவீட்டாரையும் அழைத்து என்னோடு மகிழுங்கள் ஏனெனில் காணமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்'' என்பார் .**

**லூக்கா15:4-6**

இதில் முக்கியமானது என்னவென்றால் மந்தையில் இருந்து பிரிந்து கீழ்படியாமல் பாவத்தில் விழுந்த ஆட்டைத்தேடி அதன் அருகில் வரும் இயேசுவின் அன்பு மேலானது. எனவே சமூகத்தில் பயங்கரமான பாவகாரியங்களில் ஈடுபட்டிருக்கும் யாராய் இருந்தாலும் அதில் இருந்து அவர்களை மீட்டு எடுப்பது கிறிஸ்தவராகிய எமக்குள்ள சவாலாகும்.

எமக்கு இறைவனிடமிருந்து கிடைத்துள்ள எல்லையில்லாத இரக்கங்களை நினைத்துப் பிறரும் அந்த இரக்கத்தை அனுபவிப்பதற்குச் செயற்படும் போது விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என்பதை இவ்வுவமை எமக்குக் காண்பிக்கின்றது.

### பத்து மினா நாணய உவமை

உயர் குடிமகன் ஒருவர் ஆட்சியுரிமை பெற்றுவரத் தொலைநாட்டிற்குப் போகப் புறப்பட்டார். அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப்பேரை அழைத்து பத்து மினாக்களை அவர்களிடம் கொடுத்து நான் வரும்வரை இவற்றை வைத்து வாணிகம் செய்யுங்கள் என்று கூறிப் புறப்பட்டார்.

அவர் ஆட்சியுரிமை பெற்றுத் திரும்பிவந்து தம்மிடம் பணம் வாங்கி யிருந்த பணியாளர்கள் வாணிகம் செய்து எவ்வளவு பணம் ஈட்டியுள் ளார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக அவர்களை அழைப்பித்தார்.

அரசர் - நான் கொடுத்த நாணயத்தில் நீ எவ்வளவு பணம் சம்பாதித்தாய்?

1ம் பணியாளர் - ஐயா, உமது நாணயத்தில் மேலும் பத்து நாணயத்தைச் சேர்த்துள்ளேன்.

அரசர் - மிகவும் நல்லது, நல்ல பணியாளரே மிகச்சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர் எனவே பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரு.

(அதன்பின் அரசன் இரண்டாம் பணியாளரிடம் கேட்டார். )

அரசன் - நீ எவ்வளவு பணம் சம்பாதித்தாய்?

2ம் பணியாளன் - ஐயா, நீர் தந்த ஐந்து நாணயத்தைக் கொண்டு மேலும் ஐந்து நாணயத்தை சேர்த்துள்ளேன்.

அரசன் - நீயும் ஐந்து நகர்களுக்கு அதிகாரியாய் இரு.

(இவ்வாறு அரசர் தமது பணியாளர்களை அழைத்து அவர்கள் சம்பாதித்த அளவுகளை கேட்டு அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார் ஆனாலும் அவர்களிடையே ஒரு பணியாளரின் பதிலானது.)

பணியாளர் - ஐயா, இதோ உமது மினா நாணயத்தை ஒரு கைக்குட் டையில் முடிந்து வைத்திருக்கிறேன். ஏனெனில் நீர் வைக்காததை எடுக்கிறவர் நீர் விதைக்காததை அறுக்கிறவர், நீர் கண்டிப்புள்ளவர் என்பதை அறிந்து உமக்கு அஞ்சினேன்.

(அதற்கு அரசர் கடுமையாகக் கோபம் கொண்டு பேசினார்.)

அரசர் - பொல்லாத பணியாளனே, உன் வாய்ச்சொல்லைக் கொண்டே உனக்குத் தீர்ப்பிடுகிறேன். நான் கண்டிப் பானவன், வைக்காததை எடுக்கிறவன் விதைக்காததை அறுக்கிறவன் என நீ அறிந்திருந்தாயானால் நான் வரும்போது வட்டியோடு பெற்றுக்கொள்ள நீ ஏன் என் பணத்தை வட்டிக்கடையில் கொடுத்து வைக்கவில்லை?

(பின்பு அரசன் அருகில் நின்ற தன் பணியாளரிடம் கூறினார்.)

அரசன் - அந்த நாணயத்தை அவனிடமிருந்து எடுத்து பத்து நாணயம் உள்ளவருக்குக் கொடுங்கள்.

பணியாளன் - ஐயா, அவரிடம் பத்து நாணயங்கள் இருக்கின்றனவே.

அரசன் - உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும் இல்லாதோரிட மிருந்து உள்ளதும் எடுக்கப்படும்.

வாசிப்போம்

**லூக்கா19:11-27**

இந்த உவமைக் கதையினூடாக எமக்குக் கொடுத்துள்ள திறமைகளை வளர்ச்சியடையச் செய்து இறையரசிற்காக நாம் செயற்படவேண்டும் என்பதை இயேசு எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு எமக்குரிய திறமைகளைப் பயன்படுத்தி, அவற்றை மேலும் வளர்த்து பயன் மிகுந்தவர்களாக வாழ வேண்டும் என்பது தெளிவாகின்றது. கிடைத்துள்ள திறமைகளை மறைத்து வைக்கும்போது அத்திறமைகள் இல்லாமல் போவதற்கு இடமுண்டு. எனவே எமது திறமைகளை வளர்ச்சியடையச் செய்து செயற்படும் போது மேலும் மேலும் இறை ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். எனவே இதற்கு ஏற்றவாறு செயற்படுவோம்.

**சிந்தித்துப் பார்ப்போம்.**

மேலே குறிப்பிட்ட இரு உவமைக் கதைகளுக்கு ஏற்ப இறையரசின் பெறுமதிகளை உணர்ந்து முன்மாதிரியான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் பங்கு பெறுவோம். இறைவனைவிட்டு தூரம் சென்ற பாவிகளை ஒதுக்கிவிடாமல் அவர்களை மீட்டுக் கொள்வதில் முயற்சி செய்வோம். மீண்டும் இறைவன் பக்கம் திரும்பி இறைவன் அவர்களை அழைத்துக் கொள்வதற்கு நாம் செயற்படுவோம்

மேலும் இந்த நற்காரியத்தை நிறைவு செய்வதற்கு நமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பங்களை அறிந்து கொண்டு எமது திறமைகளை அதற்காக அர்ப்பணிப்போம். அவ்வாறே அத்திறமைகள் மறைந்து போகாமல் இறை மகிமைக்காக அர்ப்பணித்து நல்லதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பச் செயற்படுவோம்.



**செயற்பாடு**

1. நீர் பெற்றுள்ள 5 தாலந்துக்களைக் குறிப்பிடுக.
2. ஒய்வுநாள் பாடசாலையில் இறைவனை விட்டு விலகிச் சென்ற நண்பியையோ நண்பனையோ மீட்டு இறைவன் பக்கமாக அழைத்து வருவதற்கு நீர் எடுக்கும் வழிமுறைகள் 3 எழுதுக.

# 16. அனைவரையும் ஏற்றுக் கொள்வோம்

**இயேசு வாழ்ந்த சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத பலர் இருந்தனர். அவ்வாறான சமூகத்தில் அவர் இறையரசின் பெறுமதியை வெளிப்படுத்தி செயற்பட்ட முறைகளை ஆராய்தல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**மாற்கு 10: 13-16, யோவான்; 4:7-10, யோவான் 25:30,39**

இயேசுவின் போதனைகளைக் கேட்க அவருக்குப் பின் சென்றவர்களில் பெண்கள் தமது பிள்ளைகளைக் அவரது ஆசியைப் பெறக் கூட்டி வந்தனர்.

*அம்மா 1* - அதோ! இயேசு இந்தப் பக்கம் வருகின்றார். இயேசுவிடம் பிள்ளைகளை விரைவாகக் கூட்டிச் செல்வோம்.

*அம்மா 2* -போவோம்! போவோம்! எமது பிள்ளைகள் இயேசுவிடம் ஆசிபெற விரைவாகச் செல்வோம்.



சீடர் - (அதட்டுதல்) அவர் களைப்பாக இருக்கின்றார். அவருக்குக் கரைச்சல் கொடுக்க வேண்டாம். இந்த இடத்திலிருந்து போங்கள்.

*அம்மா* - எமது பிள்ளைகள் இயேசுவிடம் ஆசிபெற வேண்டுமென கூட்டி வந்துள்ளோம்.

சீடர் - அவரைத் தொந்தரவு பண்ணாதீர்கள்.

இயேசு - ''சிறு பிள்ளைகள் என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கு உரியது.''

அம்மா - அதோ! இயேசு சிறு பிள்ளைகளை அழைக்கின்றார்.மகனே! மகளே! வாருங்கள். விரைவாக அவரிடம் செல்லுங்கள்.

இயேசு - (இயேசுவின் மடியில் சிறுவர்) ''இறையாட்சியை சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்பட மாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.''

இவ்வாறாக இயேசு சிறுவரை உயர்வாக ஏற்றுக் கொண்டார். சிறுவரை நேசித்து ஆசி வழங்கினார். ''இறையாட்சி இத்தகையோருக்கே உரியது'' எனக் கூறி இறையரசை பிள்ளையைப் போல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என உரைத்தார். அதாவது சிறுவரின் சிறப்புப் பண்புகள் தாழ்மை, மற்றும் கீழ்ப்படிவு என்பன மனித வாழ்வில் நிலைக்க வேண்டும்.

இதனால் கிறிஸ்தவப் பிள்ளைகளாகிய நாம் அவரது அன்பையும் ஆசியையும் பெற தாழ்மை மற்றும் கீழ்ப்படிவு போன்ற நற்பண்புகளை எமது வாழ்வில் இணைத்துக் கொள்வோம். அவ்வாறு செய்து அவரது அன்புப் பிள்ளைகள் ஆவோம்.

இயேசுவுக்கு எமது அன்பை வெளிப்படுத்த மகிழ்வுடன் பாடுவோம்.

ஆழம் ஆழம் மிக ஆழத்திலே
இதயத்தின் ஆழத்தில்
இயேசுவை நேசிப்பேன் II
நீயும் இயேசுவை நேசிப்பாயா
உன் இதயத்தின் ஆழத்தில்
நான் என் இயேசுவை நேசிப்பேன்
என் இதயத்தின் ஆழத்தில்

அதேபோன்று யூத சமூகத்தில் யூத மக்களுக்கும் சமாரிய மக்களுக்கும் இடையே தொடர்பு இருக்கவில்லை. இந்நிலையில் யூதனாகிய இயேசு சமாரியரை ஏற்றுக் கொண்ட நிகழ்வை ஆராய்வோம்.

கதை கூறுபவர் - இயேசு கலிலேயாவுக்கு சமாரியா வழியாகச் சென்றார். சிக்கார் எனும் ஊருக்கு வந்து சேர்ந்தார். யாக்கோபின் கிணறு அங்கு இருந்தது. இயேசு கிணற்று ஓரமாய் அமர்ந்தார். சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் எடுக்க வந்தார்.



இயேசு - குடிக்க எனக்குத் தண்ணீர் கொடு.

சமாரியப் பெண் - நீர் யூதர். நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?

இயேசு - கடவுளுடைய கொடை எது என்பதையும் குடிக்கத் தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர். அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்.

கதை கூறுபவர் - பெண் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள் சென்றாள். மக்களிடம் ''நான் மெசியாவைக் கண்டேன். '' என்று சான்று பகர்ந்தாள். இதனால் மக்கள் இயேசுவை நம்பினர்.

**வாசிப்போம்: யோவான் 4: 7-10,25: 30, 39**

சமாரியப் பெண்ணுக்கும் இயேசுவுக்கும் இடையிலான உரையாடலைக் கற்கும்போது யூதருக்கும் சமாரியருக்கும் இடையே காணப்பட்ட சமூகப் பின்னணியை அறிந்து கொள்ளமுடியும். இயேசு அந்த நிலையை மாற்றி சமாரியர் முன்னிலையில் பணிசெய்ய முன் வந்தார்.

சமாரியப் பெண் இயேசுவை மெசியா என ஏற்று முதன் முதலாக சான்று பகிர்ந்தார்.

நாம் முதலாவதாக இயேசுவை அறிந்து கொள்வோம். எம்மையும் அவர் பணிசெய்ய அழைக்கின்றார். அழைப்பை ஏற்று அவர் பணி செய்வோம்.

அனைவரையும் ஏற்று
அனைவரிலும் அன்பு காட்டி
இன்றும் என்றும் பணிசெய்வோம்.



**இயேசுவிடம் எமது விண்ணப்பம்**

அன்பான தந்தையே,

எமது சமூகத்தில் பல காரணிகளால் ஒதுக்கப்பட்டு அன்பு கிடைக்காது மதிப்பை இழந்து பலர் எமது மத்தியில் வாழ்கின்றனர். கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நாம் அவர்களில் அன்பு காட்டி வாழ உமதருள் தாரும். இறையரசின் பெறுமதியை முன்னிட்டு ஆர்வத்துடன் பணிசெய்திட வரம் தந்தருளும். ஆமென்.

### செயற்பாடு

1. உமது வகுப்பில் ஒதுங்கி வாழும் பிள்ளைகளுக்காக உங்களால் செய்யக்கூடியவைகள் யாவை?

2. இயேசுவின் அன்பில் வாழும் நீங்கள் நன்றி செலுத்தி பாடல் அல்லது கவிதை ஒன்றை எழுதுங்கள்.

# 17. ஆபத்துக்களில் கருணை செய்வோம்

**பலவிதமான துன்பங்களிலும் அனர்த்தங்களிலும் சிக்கித் தவிக்கும் மனிதர்களைப் பற்றியே இன்றைய சமுதாயத்தில் நாம் அநேகமாகக் கேள்விப்படுகின்றோம் அல்லது காண்கின்றோம். அவ்வாறான சமுதாய நிலைமைகளில் கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் இறைவன் எதை எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்து செயற்படுவதே இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

**தி.தூ.ப. 11:27-30 கலாத்தியர். 3-28**



சுனாமி



சூறாவளி



நிலநடுக்கம்



வரட்சி



வெள்ளம்

எமது வாழ்வில் நாம் முகம் கொடுக்கும் பலவிதமான அனர்த்தங்கள் சில மேலே படங்களில் தரப்பட்டுள்ளன. இவ்வனர்த்தங்களை விட வேறும் பல பிரச்சினைகள், கஷ்டங்கள் போன்றவற்றை மனிதர் அனைவரும் அனுபவித்து துன்பத்துக்கு ஆளாகின்றார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவர்களாக நாம் எவ்வாறு செயற்பட லாம்?

**வாசிப்போம்**
**தி.தூ.ப.11:27-30**

மேலே குறிப்பிட்ட திருமறைப் பகுதியினூடாக பின்வருவனவற்றை நாம் அறிந்துகொள்கின்றோம்.

- கிளாதியு பேரரசன் காலத்தில் உலகமெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது.
- இயேசுவின் சீடர் குழுவினர் பஞ்சத்தின்போது ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உதவியை யூதேயாவில் வாழ்ந்த சகோதரர்களுக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள்.
- அவர்களால் சேர்க்கப்பட்ட பொருள் உதவிகளை பர்னபா சவுல் ஆகியோர் மூலமாக சபை மூப்பர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவத்தினூடாக ஆதிக்கிறிஸ்தவ சபையானது ஒவ்வொருவரினதும் தேவைகளை அறிந்து கவனித்து செயற்பட்டது என்பது தெளிவாகின்றது. மேலும் இவ்வாறான சந்தர்ப்பங்களுக்குச் சரியாக முகம் கொடுத்து செயற்படுவதற்குச் சரியான வழிமுறைகளைக் கையாண்டனர் என்பதும் தெளிவாகின்றது.

இயேசுவின் கற்பித்தலின்படி நாம் எப்போதும் அயலவரோடு அன்பாகச் செயற்பட வேண்டும் அனுதின வாழ்வில் முகம் கொடுக்கும் பலவித பிரச்சனைகள் துன்பங்களின் மத்தியில் ஒவ்வொருவரினதும் தேவைகளுக்காக நாமும் உதவ,

ஒவ்வொருவருக்கும் முடிந்த அளவில் உதவி செய்வதில் ஈடுபட வேண்டும்.

- ★ பண உதவிகளை வழங்குதல்.
- ★ எம்மால் இயன்ற உதவி செய்தல்
- ★ ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள்ளல்.
- ★ ஒவ்வொருவருக்கும் செவி கொடுத்தல்.
- ★ அன்போடு செயற்படுதல்.

| | |
|---|---|
| சமூக தேவைகளின் போது ஒவ்வொருவருக்கும் உதவி செய்வதற்கு தமது வாழ்வை அர்ப்பணிப்பதற்கு முன்வருதல் | ★ சமூக நிறுவனங்கள் சங்கங்களில் அங்கத்தவர்களாகவும் தலைவர்களாகவும் செயற்படல்<br>★ தேவைகளின் மத்தியில் முன்னின்று செயற்படுதல்<br>★ தமது திறமைகளைப் பணியில் ஈடுபடுத்தல்<br>★ சரியான தீர்மானங்களை எடுத்தல் துன்பங்களில் இருந்து மீட்பதற்கு பொதுவாக செயற்படல் |
| உதவி செய்யும் போது தேவை இருப்போரை அறிந்து சரியாக கவனித்து செயற்பட வழிமுறைகளை எடுப்போம் | ★ ஆடை அணிகள் உணவு பானம்<br>★ அறிவுரை<br>★ மனதிலும் சரீரத்திரத்திலும் ஆறுதல்<br>★ சரியான தீர்மானங்களை எடுத்தல்<br>★ ஏற்றுக்கொள்வதும் அன்பு செய்வதும் |
| சமூக தேவைகளுக்காக கருணையோடு உதவி செய்வதற்காக ஒருங்கிணைந்து சரியான முறையில் வழிமுறைகளை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். | ★ காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றதாக செயற்படுதல்<br>★ வீண்விரயத்தைத் தவிர்த்தல்<br>★ திட்டங்களோடு செயற்படுதல் |

சமூக தேவைகளின் போது மேலும் எம்மால் செயற்படக்கூடிய முறைகளைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

வாழ்வில் இவ்வாறான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும்போது நாம் செயற்படுவது எவ்வாறு?

**''உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர்**
**என்றும் அடிமைகள் என்றும் உரிமைக்**
**குடிமக்கள் என்றும் இல்லை**
**ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை கிறிஸ்து இயேசுவோடு**
**இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்.**
**கலாத்தியர்.3:28.**

இவ்வாறான சமூகத்தின் தேவைகளின்போது

- ★ வேறுபாடுகள் இன்றி செயற்படவேண்டும்.
- ★ உதவிபுரியும் பணியில் நண்பருக்காக பாராபட்சம் காட்டாது பொதுவாக செயற்படவேண்டும்.
- ★ பிரதிபலன் கருதாது செயற்படவேண்டும்.
- ★ நாம் செய்யும் உதவி எத்தகைய இலாபத்தையும் பெறுவதற்காக அல்ல.
- ★ நன்றியை எதிர்பார்த்தல்ல நேர்மையாக அர்ப்பணிப்போடு பணி செய்யவேண்டும்.
- ★ இயன்ற அளவு பொதுவான பணியில் இணைய வேண்டும்.
- ★ எமது நண்பர்களுக்குத் தேவைகளை அறிவித்து அவர்களின் உதவியை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவேண்டும்.
- ★ அவர்களுக்காக வேண்டுதல் செய்வதற்காக நாம் பிறரையும் அழைக்க வேண்டும்.
- ★ சகவாழ்வில் ஒருவருக்கொருவரிடையே சகோதரத்துவத்துடன் செயற்பட ஒன்றிணைதல் வேண்டும்.

**செயற்பாடு**

1. நீர் வாழும் சூழலில் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த குழுவினருக்கோ அல்லது ஒருவருக்கோ நீர் செய்யும் உதவிகளை எழுதுக.
2. சமூக பிரச்சனைகளில் நீர் செய்யக்கூடிய இறைவேண்டல் ஒன்றை எழுதுக.

# 18. திருவிவிலியத்தின் மூல உருவாக்கம்

**புனிதநூலாக திருவிவிலியம் எழுதப்பட்டு உருவாகிய முறையை தேடிப்பார்த்து அது இறை ஏவுதலால் எழுதப்பட்டது என்பதை அறிவதே இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

நிரஞ்சன் - நிர்மலா இங்கே பார் இன்று நான் வீட்டிலிருந்து கொண்டு வந்த புத்தகத்தைப் பார்

நிர்மலா - ஆ அழகாய் இருக்கின்றது. (புத்தகத்தை வாங்கி முதல் அட்டையை வாசித்து) ''சிறுவர் தீப வழி'' என்ன நிரஞ்சன் இது?

நிரஞ்சன் - இது சிறுவர்களுக்காக எழுதப்பட்ட வேதாகமம். இங்கே பார் வேதாகமக் கதைகள் படங்களுடன் இருக்கின்றன. (ஆசிரியர் வகுப்பிற்கு வருகிறார்.)

ஆசிரியர் - காலை வணக்கம்.

மாணவர்கள் - காலை வணக்கம் உரித்தாகுக!

நிர்மலா - இங்கே பாருங்கள் நிரஞ்சன் புதியதொரு வேதாகமம் கொண்டு வந்து இருக்கின்றான்.

ஆசிரியர் - ஆ இது ''சிறுவர் தீப வழி'' தானே? இந்த வேதாகமம் இலங்கையில் அச்சிடப்பட்டு வேதாகமச்சங்கத்தால் பிள்ளைகளுக்காக வெளியிடப்படும் ஒன்று.

நிரஞ்சன் - இதை எனக்குச் சின்னம்மா கடந்த முறை நத்தாருக்கு பரிசாகத் தந்தார்கள்.

ஆசிரியர் - மிகவும் பெறுமதியான பரிசு உனக்கு கிடைத்திருக்கின்றது. நல்லது இப்போது அனைவரும் உட்காருங்கள்.நான் இந்த வேதாகமம் எழுதும் முன் அது எவ்வாறு உருவாகியது என்பதை விளக்கிக் கூறுகின்றேன். அதற்கு முன் நீங்கள் கூறுங்கள் பார்ப்போம். விவிலியத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் ?

நிசாந்தன் - வேதாகமம் இறைவனின் வார்த்தை என ஒய்வுநாட் பாடசாலையில் எனக்குக் கற்றுக்கொடுத்த அக்கா ஒருவர் சொல்லித் தந்தார்.

ஆசிரியர் - ஆம் வேதாகமம் இறைவனின் வார்த்தையாக அறிமுகமாகின்றது. அவ்வாறே வேதாகமத்தை எழுதிய பலருக்கும் இறைவனைப்பற்றி எழுதுவதற்கு இறை வழிகாட்டல் இருந்தது. அதை நாம் கூறுவது இறை ஏவுதல் என்று கூறுவோம் முழு வேதாகமும் எழுதுவதற்கு ஏறத்தாள 1000 வருடகாலம் எடுத்துள்ளது.

சலோமி - வேதாகமம் ஒரு பெரிய புத்தகம். எங்கள் தாத்தா வேதாகமம் ஒரு புனிதநூல் என்று எப்போதும் கூறுவார்.

ஆசிரியர் - ஆம் வேதாகமம் இறைவனின் வார்த்தை என்றபடியால் அது புனிதநூலாக அறிமுகமாகின்றது. வேதாகமத்தில் நீண்ட வரலாறு காணப்படுகின்றது.வேதாகமம் கிரேக்க மொழியில் ''பிபிளுஸ்'' என அழைக்கப் படுகின்றது. இதன் கருத்து புத்தகம் ஆகும். ஆரம்பகாலத்தில் புனிதநூலானது கற்சுவர்களிலும், ''பைப் பிரஸ்'' பிரதிகளிலும் பதனிடப்பட்ட தோல்களிலும் எழுதப்பட்டிருந்தது. அதைப்பற்றி நாம் தேடிப் பார்ப்போம்.

றெகான் - வேதாகமத்தில் பத்துக் கற்பனைகள் கற்பலகைகளில் எழுதியிருப்பதாகத் தானே கூறப்படுகின்றது.

ஆசிரியர் - ஆம் சரி றெகான் விடுதலைப் பயணம் *31:18* ஐ நாம் வாசித்துப் பார்ப்போம்.

***ஆண்டவர் சீனாய் மலைமேல் மோசேயோடு பேசி முடித்தபின் கடவுளின் விரலால் எழுதப்பட்ட கற்பலகை களான உடன்படிக்கை பலகைகள் இரண் டையும் அவரிடம் அளித்தார்.***

***விடுதலைப்பயணம் 31:18.***



நிரஞ்சன் - ஆம் இங்கே இருக்கின்றது. ''கற்பலகையிலான உடன் படிக்கை'' பலகை என்று.

ஆசிரியர் - ஆரம்ப யுகத்தில் கற்களைச் செதுக்கி கற்சுவராக அமைத்து எழுதினர். இவ்வாறு மோசேயின் காலத்தில் எழுதப்பட்டது என நம்பினர். இதோ பாருங்கள் இங்கே அவ்வாறான கற்சுவர்கள் இதில் இறைவார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகள் தேடி எடுக்கப்பட் டுள்ளது.





கற்சுவர்கள்

நிரஞ்சன் - இருப்பினும் இவைகளைத் தூக்கிக் கொண்டு செல்வது கஷ்டம் தானே இவ்வாறாக எத்தனை கற் சுர்களைத்தான் செய்ய முடியும்.

ஆசிரியர் - அது சரி கற்பலகைகளைவிட ''பைப்பிரஸ்'' பிரதிகளிலும் எழுதப்பட்டு இருந்தது.

ஜெகன் - ''பைப்பிரஸ்'' பிரதி! புதிய பெயராக இருக்கின்றது அது என்ன?

ஆசிரியர் - பைப்பிரஸ் என்பது நைல்நதி ஓரத்தில் மூன்று கிளைகளாக உள்ள மரத்தின் இலைகள் அவ் இலை களை மரத்தில் இருந்து எடுத்து வந்து அவைகளைத் தட்டி உலர்த்தி எழுதுவதற்கு பயன்படுத்தினர். வேதாகமத்தின் பல பகுதிகள் அதில் எழுதியிருந்தன. இவைகள் ஒன்றோ டொன்று தொடுத்து எழுதப்பட்டிருந்தன. இவை ஏட்டுச் சுருள் என அறிமுகமானது.

றொகான் - எவ்வளவு சிரமமான வேலை இதைச் செய்வதற்கு எவ்வளவாகக் கஷ்டப்பட்டிருக்க வேண்டும்.

ஆசிரியர் - ஆம் மிகவும் சிரமமான வேலை இருப்பினும் அவர்கள் அதைச் செய்தார்கள். இங்கே பாருங்கள் பைப்பிரஸ் பிரதிகளில் இறைவார்த்தைகள் எழுதப்பட்டிருப்பதை



பைப்பிரஸ் பிரதி



ஏட்டுச் சுருள்

ஆசிரியர் - *இவ்வாறு பைப்பிரஸ் நூல்கள் 1947 ஆம் வருடத்தில் சாக்கடலின் அருகில் குமரான் என்னும் குகையில் 2000 ஆம் வருடமளவில் பழமையான ஏடுகளாகக் கிடைக் கப்பட்டன.*

நிரஞ்சன் - *இவை அழிந்து போகாமல் எவ்வாறு வைத்திருப்பது? அவர்கள் எவ்வளவாகச் சிரமப்பட்டிருப்பார்கள்.*

ஆசிரியர் - *இது நல்ல கேள்வி அக்காலத்தில் மட்பாண்டம் செய்து அதற்குள்ளே எழுதிய புனித நூல்களை வைத்துப் பாதுகாத்து வந்தனர். நிரஞ்சன் எரேமியா 32:15 ஆம் வசனத்தை வாசியுங்கள்*

**''இஸ்ரயேலின் கடவுளாகிய படைகளின் ஆண்டவர். இவ்வாறு கூறு கின்றார். இந்த ஒப்பந்தப் பத்திரங்களை அதாவது முத்திரை இடப்பட்டதையும் அதன் நகலையும் எடுத்துக்கொள் நீண்ட நாள் அவை பாதுகாப்புடன் இருக்கும் பொருட்டு அவற்றை ஒரு மட்பாண்டத்தில் போட்டு வை.''**

*எரேமியா:32:14*

சலோமி - *இவ்வாறாக மட்பாண்டங்களில் இருந்தது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும். இருப்பினும் பழைய முறை யில் அல்ல இன்று வேதாகமத்தில் அநேக கதைகள் சம்பவங்கள் தாள்களில் வெளியிடப்பட்டுள்ளன.*

ஆசிரியர் - *இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் செய்த வல்லமை யான செயல்களை நினைவில் வைத்திருந்தனர். அவ் வாறே புனிதநூலையும் தந்தார் என நம்பினர் இப்போது நாம் ஏசாயா 59:21 ம் வசனத்தை வாசிப்போம்.*

**''உன் மேல் இருக்கும் என் ஆவியும் உன் வாயில் நான் வைத்துள்ள என் வார்த்தைகளும் உன் வாயினின்றும் உன் வழி மரபினர் வாயினின்றும் வழி வழி வருகும் உன் தலைமுறையினர் வாயினின்றும் இன்றும் என்றென்றும் நீங்கிவிடாது''**

**ஏசாயா 59:21.**

நிரஞ்சன் - இது என்றால் புதுமையான நினைவுகள் அல்லவா.

ஆசிரியர் - ஆம் அவ்வாறு அவர்கள் இறைவார்த்தைகளை நினைவில் வைத்து அவர்களின் பிள்ளைகளுக்குக் கூறினார். அவ்வாறே பரம்பரை பரம் பரையாக அவற்றை நினைவில் வைத்திருந்தனர். அதை நாம் வாய்மொழிப் பாரம்பரியம் (வாய்மொழியாக பரம்பரையாக சொல்வது) என்போம். அதாவது அவைகள் வாய்ச் சொல்லாக ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்குச் சொல்லப்பட்டு நினைவில் வைத்து பாதுகாத்தனர். இவ்வாறாக இறைவார்த்தையை எழுத்தாக்கம் செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டது. திருவி விலியம் எழுதப்படுவதன் முக்கியத்துவத்தை கீழ்வரும் விடயங்கள் வெளிப்படுத்துகின்றன.

- ★ வாய்மொழி மரபாக வார்த்தைகளை மாறுபடாமல் பாதுகாக்க
- ★ மக்கள் இலகுவாக விளங்கிக்கொள்வதற்காக
- ★ எதிர்கால பரம்பரையினருக்கு எழுத்து மூலமாக வழங்குவதற்காக
- ★ பாபிலோனியாவில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேல் மக்கள் திரும்பி வந்து எருசலேம் ஆலயத்தையும் நகரத்தையும் கட்டியெழுப்ப இறைவார்த்தை வழிகாட்டல்கள் அவசியமாயிற்று.
- ★ இறைவன் இறைவார்த்தைகளை எழுதிவைக்கும்படி கட்டளை யிட்டமை.

**நான் உனக்குச் சொல்லியிருக்கும் சொற்களை எல்லாம் ஏட்டுச் சுருளில் எழுதியவை எரேமியா 30: 2**

- ★ திருவிவிலியத்தை இறைவழிபாடுகளில் பயன்படுத்துவதற்காக

இதனால் திருவிவிலியம் கிறிஸ்தவர்களில் முக்கியமான நூலாகும்.

இதில் இறைவார்த்தைகள் எழுதப்பட்டுள்ளமையால் எமது வாழ்வுக்கு உறுதுணையாக அமைகின்றது.

★ திருவிவிலியத்தை நாள்தோறும் வாசித்து தியானிப்பதற்கு பழக்கப்பட வேண்டும்.
★ இதை வாசிப்பதனால் எமது வாழ்வுக்கு புதிய வழிகாட்டலும், வல்லமையும் கிடைக்கின்றது.

இவ்வாறாக திருமறையின் வழிகாட்டல்களைப் பெற்று எமது வாழ்வை ஒளிபெறச் செய்வோம்.

**செயற்பாடு**

1. நீங்கள் கற்றுக் கொண்டவாறு புனிதநூல் ஆரம்பத்தில் எவ்வாறு எழுதப்பட்டது ?
2. வாய்மொழிப் பாரம்பரியத்தில் நிலவிய இறைவார்த்தையானது எழுத்தாக்கம் பெற்றதால் கிடைத்த விசேட பயன்கள் 5 ஐ நிரல்படுத்துக.

# 19. வேதாகமத்தோடு தொடர்புடைய முன்னோடிகள்

**வேதாகமத்தை வெளியிடுவதற்காக முன்னோடிகளாய் இருந்தவர்களையும், அதற்கான நிறுவனங்களைப் பற்றிய அறிவையும் பெற்றுக் கொண்டு அதைத்தமது வாழ்விற்கு ஏற்றதாக்கிக் கொள்வதே இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

**மேரிஜோனும் தோமஸ் சார்ல்ஸ்சும்**


மேரிஜோன்ஸ்

இன்று நாம் ஒரு வேதாகமத்தைப் பெற்றுக் கொள்வது கடினமான காரியமல்ல. அது மிகவும் இலகுவானதாகும். குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் செலுத்தி நாம் இப்போது திருமறையை வேதாகமச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். இருப் பினும் அன்றைய காலத்தில் வேதாகமத்தை பெற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. முற்காலத்தில் வேதாகமத்தின் விலை மிகவும் அதிகமாக இருந்தது. கீழே குறிப்பிடப்பட்டது பிரித்தானியாவில் வேல்ஸ் பிரதேச த்தில் 1784 இல் பிறந்த மேரிஜோன்ஸ் என்னும் 9 வயது சிறுமி வேதா கமத்தைப் பெறுவதற்காக பல சிரமங்களை எதிர்நோக்கினார்.

மேரி ஜோன்சின் பாடசாலையில்

ஆசிரியர் - மேரி இன்று எமது பாடம் கானாவூர்த் திருமணம் பற்றியதாகும். பாருங்கள் யோவான் எழுதிய நற்செய்தியில் அதை வாசியுங்கள்.

மேரி - எனக்கு அந்தக் கதை கொஞ்சம் நினைவில் இருக்கின்றது. இருப்பினும் அதைச் சரியாக நான் வாசிப்பதற்கு என்னிடம் வேதாதகமம் இல்லையே

எங்கள் ஆலயத்தில் போதகரிடம் மட்டுமே வேல்ஸ் மொழியிலான வேதாகமம் ஒன்றுண்டு எனக்கும் வேதாகமத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமானால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்

ஆசிரியர் - அது உண்மைதான் மேரி வேதாகமத்தைத் தமக்கென வைத்திருக்கும் போது அது மிகவும் பயனுள்ளதாகின்றது. இருப்பினும் வேதாகமத்தைப் பெறுவதற்கு அதிக பணம் அவசியமாகும்.

(மேரி அதிகம் முயற்சியுள்ளவள். எவ்வாறாயினும் ஒரு வேதாகமத்தை பணம் கொடுத்து வாங்க அவள் தீர்மானித்தாள். அதற்காக அவளின் பெற்றோர் சாப்பிடுவதற்காகக் கொடுத்த பணத்தைச் சேர்த்து வைத்தாள், விறகு சேகரித்து விற்றாள், கோழி வளர்த்து முட்டைகளை விற்றாள், அயலிலுள்ள வீடுகளுக்குச் சென்று வேலைகளைச் செய்து கிடைத்த பணத்தைச் சேர்த்தாள், தேனீகளைப் பெட்டிசெய்து வளர்த்தாள். இவ் வாறு அவளுக்குத் தேவையான பணத்தைச் சேகரித்துக்கொள்வதற்கு ஆறு வருடங்கள் சென்றன.)

(மேரி வேதாகமம் வாங்கக்கூடிய பிரதேசத்தை நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தல்)

மேரி - சரியான களைப்பாக இருக்கின்றது. எனினும் எனக்கென ஒரு வேதாகமத்தை நான் பெற்றுக் கொள்ளமுடியும் என நினைக்கும்போது களைப்பு இல்லாமலே போய்விடுகின்றது.

வழிப் போக்கன் - மகளே நீ எங்கே செல்கிறாய்? பார்ப்பதற்கு நீ மிகவும் களைத்துப்போய் இருக்கின்றாய். இப்போ இரவாகவும் போகின்றது. உன்னுடைய பாதணியும் நன்றாகத் தேய்ந்துபோய் இருக்கின்றது.

மேரி - மாமா தோமஸ் சார்ல்ஸ் என்னும் போதகர் இருக்கும் இடத்தை எனக்குக் கூறுவீர்களா?

வழிப் போக்கன் - இவ்வாறு நேராகப் போனால் சந்திக்கும் ஆலயத்தில்தான் அவர் இருக்கிறார்.

(மேரி அன்று இரவு அப்பகுதியில் உள்ள எட்வேட் போதகரின் வீட்டில் தங்கி இருந்து மறுநாள் தோமஸ் சார்ல்ஸ் போதகர் அவர்களைச் சந்திப் பதற்கு சென்றாள். மேரி அவரைச் சந்தித்து .)

மேரி - எனக்கு வேல்ஸ் மொழி வேதாகமம் வேண்டும். நான் வேதாகமம் வாங்குவதற்கு ஆறு வருடங்கள் பணம் சேர்த்தேன். இதோ அந்தப் பணம்.

தோமஸ் சார்ல்ஸ் - மகளே என்னிடமிருந்த வேல்ஸ் வேதாகமம் அனைத்தும் முடிந்து விட்டது.

மேரி - தயவுசெய்து எனக்கு எப்படியாவது வேதாகமம் தாருங்கள் அது எனக்குப் பொன்னைப் போன்றது. நான் எவ்வளவு காலமாக இதனை எதிர்பார்த்திருந் தேன்.

தோமஸ் சார்ல்ஸ் - சரி நான் எனது நண்பனுக்காக வைத்திருந்த வேதா கமம் இருக்கின்றது அதை நான் உனக்குத் தரு கின்றேன்.

மேரி - உங்களுக்கு இறை ஆசி உரித்தாகட்டும்.

(மேரி ஜோன்ஸ் வேதாகமத்தை அணைத்துக் கொண்டு மிகவும் வேகமாக தனது வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினாள்)

மிகவும் உருக்கமான இக்கதைக்குப் பின்னர் நாம் வேதாகமத்தின் மொழி பெயர்ப்பிற்காகத் தன்னை அர்ப்பணித்த ஒருவரின் வாழ்க்கையைப் பற்றிக் கற்போம்.

**கௌரவ கலாநிதி வில்லியம் கேரி போதகர் (1760 - 1834.)**



கௌரவ வில்லியம் கேரி போதகர்.

வில்லியம் கேரி இங்கிலாந்தில் பிறந்தவர். அவர் சிறுவயது முதல் இயற்கைச் சூழலையும் விலங்குகளையும் அன்பு செய்தார். அவர் புத்தகங்கள் வாசிப்பதிலும் மிக வும் விருப்பம் கொண்டவர். சிறு வயதில் பாதணிகளைத் தைப்பதிலும் அவைகளைப் புதுப்பிப்பதிலும் பெற்ற பணத்தைக் கொண்டு தமது வாழ்வைக் கொண்டு சென்றார். இருப்பினும் அவ ரின் ஒரே எதிர்ப்பார்ப்பானது இறை வனுக்குப் பணி செய்வதே. அவர் தன்னிடம் இருந்த உலகப்படத்தைப் பார்த்து எப்போதும் கிறிஸ்துவை அறியாத மக்களுக்காக ஜெபிப்பதை வழமையாகக் கொண்டிருந்தார்.

இறைபணியைப் பற்றி மிகவும் அக்கறையோடு இருந்த அவர் 1791 இல் ஒரு சபையின் போதகராக நியமிக்கப்பட்டார். அவர் சபையின் பணி களோடு மறைத்தூதுப் பணிக்காக பப்டிஸ்ட் இறை சங்கத்தை உரு வாக்குவதற்கு முன்னோடியாக பணி செய்தார். இதற்கிடையே இந்தியாவில் பணிசெய்த விரிவுரையாளரின் அறிவுரையாலும் போதனையாலும் தைரியத்தைப் பெற்று 33 வயதில் அதாவது 1793 இல் இந்தியாவை நோக்கிச் சென்றார். அங்கு பணி செய்யும்போது அவரது இளைய மகன் பீட்டர் 5 வயதில் இறைவனடி சேர்ந்தார். இருப்பினும் அவர் தைரியத்தை இழக்கவில்லை. அவர் ஓர் அச்சகத்தை உருவாக்கி கிறிஸ்தவ பணிக்காக தேவையான புத்தகங்களை அச்சிட்டார்.

இருப்பினும் 1778 ஆம் ஆண்டு அவரின் இறைபணிக்காக நான்கு நபர் களின் பெரிய உதவிகள் கிடைத்தன. அவர்களோடு இணைந்து மறைத் தூதுப் பணியின் மத்திய நிலையத்தை அங்கே நிறுவினார். திருவிவிலி யத்தை மொழிபெயர்ப்பதையே பிரதான நோக்கமாக அவர் கொண்டி ருந்தார். இந்நிலையத்தின் மூலம் வேதாகம மொழிபெயர்ப்பிற்கான புதிய வழி திறக்கப்பட்டது.

அவரின் அர்ப்பணிப்பான பணியினால் 40 மொழிகளில் புதியஏற்பாடு மொழி பெயர்க்கப்பட்டது. முழுவேதாகமமும் 20 இந்திய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு இந்தியாவின் அநேக மக்களுக்கு இறை வார்த்தையை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் கிட்டியது. வேதாகம மொழிபெயர்ப்பைத் தனது பணியின் ஒரே நோக்கமாக கொண்ட அவர் எவ்விதத்திலும் தற்புகழ்சியை நாடவில்லை. தனக்கு முக்கியத்துவம் கொடுக்காத கேரி பின்வருமாறு கூறியுள்ளார். ''நான் இறந்த பின்பு கேரியைப் பற்றி பேசக்கூடாது ஆனால் என் மீட்பரைப் பற்றி பேசுங்கள்'' என்று.

**வேதாகமச் சங்கமும் அதன் செயற்பாடுகளும்**

இலங்கையில் வேதாகமச் சங்கத்திற்கு ஆரம்ப அடித்தளமாக 1812 இல் கொழும்பில் உருவாகிய பிரித்தானிய வெளிநாட்டு வேதாகமச் சங்கம் (British and foregion bible society) அமைந்தது.

அதன் ஒரு பிரிவாக இலங்கை வேதாகமச் சங்கம் அதன் செயற்பாடுகளுக்காகப் பிரிந்து இருந்தது. அடுத்ததாக 1944 இல் இலங்கை இந்திய வேதாகம சங்கம் உருவாகியது. இலங்கை வேதாகமச் சங்கம் (Ceylon bible society) சுதந்திரமான நிறுவனமாக 1965 இல் இயங்கத் தொடங்கியது. இவ்வாறு இலங்கையிலும் வேதாகமச் சங்கத்தின் வேலைத் திட்டங்கள் 2012 இல் இருநூறு வருடங்களைப் நிறைவு செய்தது.

கிறிஸ்தவ மக்களுக்கு ஆரம்பம் முதல் வேதாகமத்தை மொழிபெயர்த்து அச்சிட்டுச் கொடுத்த இலங்கை வேதாகமச் சங்கம் இலங்கை கலா சாரத்தையும் மக்களின் மொழி நடையையும் பயன்படுத்தி வேதாகமத்தின் புதியபதிப்பை 1982 இல் சிங்கள மொழியில் வெளியிட்டனர். அதன் மறு திருத்திய (Revised) பிரதிகள் 2006 இல் வெளியிட்டனர். அனைத்துக் கிறிஸ்தவ பிரஜைகளும் அதாவது சீர்திருத்த சபைகள் (Reformded Churches), ரோமன் கத்தோலிக்கசபை மற்றும் புதிய கிறிஸ்தவ சபைகள் அனைத்தும் இணைந்து பொது புதிய ஏற்பாட்டை வெளியிட சபைகளுக்கிடையே ஒன்றிப்பு வெளிப்பட்டது.

**வேதாகமம் தனிப்பட்ட பாவனைக்காக**

அனைத்து கிறிஸ்தவர்களும் தமக்கென ஒரு வேதாகமத்தை வைத்திருப்பது தேவையான ஒன்றாகும். வேதாகமத்தில் இறை வழிகாட்டலைத் தமது வாழ்வில் பெற்றுக் கொள்வதற்கு அதை அனுதினமும் வாசிப்பது அவசியமாகும். வேதாகமத்தை வாசிக்கும் போது ஜெபத்தோடு தூய ஆவியின் வழிகாட்டலைத் தேடுவோம். வேதாகமச் சங்கத்தின் செயற்பாட்டால் அவ்வாறு வேதாகமத்தைச் சரியான முறையில் கற்றுக் கொள்வதற்கும் தேவையான குறிப்புக்களை எடுப்பதற்கும் இடம் கிடைத்தது. வேதாகமம் கிறிஸ்தவ வாழ்விற்கு மிகவும் பயனுடையதாகும். நீங்களும் இறைவார்த்தையை வாசிப்பதற்கு உங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் வேதாகமத்தை வாழ்வின் வழியை ஒருங்கமைக்கும் கைநூலாக வைத்துக் கொள்வோம்.

**செயற்பாடு**

1. வேதாகமத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மேரி ஜோன்ஸ் எடுத்த முயற்சிகளைக் குறிப்பிடுக.
2. இலங்கை வேதாகமச் சங்கத்தின் வரலாற்றைக் குறிப் பிடும் பிரதான கருத்துக்கள் 3 ஐ சுருக்கமாக குறிப்பிடுக.

# 20. திருவிவிலிய மொழிபெயர்ப்பு

***தற்போது திருவிவிலியத்தை எமது சுய மொழிகளில் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளமை விசேட ஆசீர்வாதம் ஆகும். பல மொழிபெயர்ப்புக்களின் விபரம் மற்றும் தேசிய மொழிகளில் மொழிபெயர்த்தல் விபரங்களைக் கற்றல் இப்பாடத்தில் எதிர் பார்க்கப்படுகின்றது.***

இறைவனின் மீட்பின் திட்டம் திருமறையின் ஆரம்பம் முதல் இறுதிவரை ஆழமாகத் தரப்பட்டுள்ளது. மீட்பின் திட்டத்தை அறிந்துகொள்ள இறைவார்த்தையைக் கற்றல் வேண்டும். அதனைக் கற்பதற்கு சுய மொழியில் திருவிவிலியம் மொழி பெயர்க்கப்பட்டிருத்தல் சிறப்பான சந்தர்ப்பமாகும். இன்று சுய மொழியில் வேதாகமத்தை உரிமையாக்க முடியுமாக இருப்பினும் மொழிபெயர்ப்புச் செயல் இலகுவானதல்ல.

திருவிவிலியத்தின் எழுத்தாக்கம் குறித்த கருத்துக்களை நாம் கற்று அறிந்து கொள்வோம்.

- ♣ எழுத்துக் கலை மற்றும் அச்சுக்கலையின் அறிமுகத்துடன் வாய்மொழிப் பாரம்பரியம் மூலமாக நிலைத்த சமய உண்மைகள் எழுத்தாக்கம் செய்யப்பட ஆரம்பமாகியது.
- ♣ ஆரம்ப காலகட்டத்தில் பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டது.
- ♣ கடந்த காலத்தில் வேதாகமத்தைக் குருமாரும் கற்றோரும் எழுத்தாக்கம் செய்தனர். வாசிக்கும், எழுதும் ஆற்றல் குறைவாக இருந்தமையால் வேதாகமப் பிரதிகள் வரையறுக்கப்பட்டிருந்தன.
- ♣ பிற்காலத்தில் திருவிவிலியம் பல மொழிகளிலும் மொழிபெயர்க் கப்பட்டது. தமது மொழிகளில் திருவிவிலியத்தை வாசிக்கும் வாய்ப்பு பலருக்கும் கிடைத்தது. இன்று உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் வேதாகமம் ஆகும். 2014 ஆம் ஆண்ட ளவில் வேதாகமம் 511 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப் பட்டுள்ளது.

- தற்போது திருவிவிலியம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இலகுவாக வாசித்து விளங்கவும் இலங்கை நாடு முழுவதும் நற்செய்தி பரப்பலுக்கும் உறுதுணையாகவும் அமைந்துள்ளது.

திருவிவிலியம் பல மொழிகளிலும் எழுதப்பட்டிருப்பினும் அதன் பொருளும் செய்தியும் மாறாது அமையும் வண்ணம் நிலைத்திட இறைவழிகாட்டல் எப்போதும் கிடைத்து வந்தது. மொழி பெயர்ப்புக்காக எபிரேய பழைய ஏற்பாடும் கிரேக்க புதிய ஏற்பாடும் பயன்படுத்தப் பட்டன. 1812 இல் இலங்கையில் பிரித்தானிய வேதாகமச் சங்கத்தின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் தமது சுயமொழிகளில் வேதாகம மத்தை விலைக்கு வாங்கும் சந்தர்ப்பம் தோன்றியது. இதனால் திருவிவிலியத்தை அவதானத்துடன் வாசித்து இறை வழிகாட்டலையும் இறையன்பையும் அனுபவித்திட எமக்குத் தருணம் கிடைத்துள்ளது.

திருவிவிலிய மொழிபெயர்ப்புக்கள்

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் எபிரேயப் பிரதி கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அது 'செப்துவஜின்து' எனப்படும்.

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு லத்தீன் மொழி பெயர்ப்பு 'வல்கேட்' எனப்படும்.

லத்தீன் திருவிவிலியம் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. எபிரேயப் பழைய ஏற்பாடு மற்றும் கிரேக்கப் புதிய ஏற்பாடுகள் ஜேர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.

சிங்கள திருவிவிலிய மொழிபெயர்ப்பு

1780 ஒல்லாந்தர் காலத்தில் வேதாகமத்தின் முழுப் பிரதியும் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது
1850 பரிசீலனை செய்யப்பட்ட சிங்கள பிரதி
1938 ஐக்கிய சிங்கள பிரதி
1996 புதிய பொது பிரதி
2006 அங்கீகரிக்கப்பட்ட இணைச்சட்ட நூலும் உள்ளடக்கத்துடன் வேதாகமமும்.

**தமிழ் திருவிவிலிய மொழிபெயர்ப்பு**

1759 ஒல்லாந்தர் காலத்தில் தமிழ் வேதாகமம்
1927 தமிழ் புதிய ஏற்பாடு
1936 தமிழ் முழு வேதாகமம்
1954 வேதாகம புதிய பதிப்பு
1996 தமிழ் புதிய மொழி பெயர்ப்பு ( பொது மொழிபெயர்ப்பு - திருவிவிலியம்)

**திருவிவிலிய மொழி பெயர்ப்பாளர்களின் பணி**

| பெயர் | தனிப்பட்ட விபர துளிகள் | மொழிபெயர்ப்பு வருடம் | பணி |
|---|---|---|---|
| அருட் தந்தை புனித ஜெரோம் | கி.வ. 345-420 காலத்தில் வாழ்ந்த துறவற குரு | கி.வ. 405 | பழைய ஏற்பாட்டை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தல். அது 'வல்கேட்' வேதாகமம் எனப்படும். லத்தீன் மொழிபெயர்ப் புக்கான அவசியமான எபிரேய மொழியை எழுதவும் வாசிக்கவும் கற்றல். |
| அருட் தந்தை ஜோன் வைக்கிளிப் | அறிவுள்ள குருவானவர்<br><br>1384 இறையடி எய்தினார். | 14 ஆம் நூற்றாண்டு | லத்தின் திருமறையை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தல்.<br><br>கிராமிய மக்களுக்கு வேதாகமத்தை விளக்க முன்வருதல். |
| அருட் தந்தை டிண்டேல் | கல்வி கற்ற ஆங்கில இன குருவானவர் | 1526 | புனித வேதாகமத்தை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தல்.<br><br>பல புதிய ஏற்பாட்டுப் பிரதிகளை இரகசியமாக இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்க செயற்படல். |

| | | | |
|---|---|---|---|
| அருட் தந்தை மார்டின் லூதர் | துறவற குருவானவர்.<br><br>ஜேர்மனியில் மத சீர்திருத்த மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தார் | 16 ஆம் நூற்றாண்டு | எபிரேய மொழி பழைய ஏற்பாட்டையும் கிரேக்க புதிய ஏற்பாட்டையும் உபயோகித்து புனித வேதாகமத்தை ஜேர்மன் மொழியில் மொழி பெயர்த்தல். |

மேற்படி மொழி பெயர்ப்பைப் போன்று யோவான் நற்செய்தி நூலில் அன்க்லோ செக்சன் பிரதியைத் தயாரித்த புனிதர் பீட் அவர்களின் பணி வரவேற்கத்தக்கது. மேலும் 1611 இல் இங்கிலாந்தில் முதலாவது ஜேம்ஸ் அரசன் ஆணைப்படி அறிஞர்கள் ஒன்றுகூடி மொழிபெயர்த்த ஆங்கில வேதாகமத்தை ஜேம்ஸ் அரசன் பதிப்புச் செய்து பல மொழிபெயர்ப்புக்களின் இடையே முக்கிய இடம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல்வேறு காலகட்டத்தில் பல எழுத்தாளர்களால் பழைய ஏற்பாடும் பல மொழிபெயர்ப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டது. இதற் கான தலைமைத்துவம் ஏற்று செயற்பட்ட எழுத்தாளர்களில் பலர் பலவித துன்பங்களையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் தமது வாழ்வையும் அர்ப்பணித்துச் செயற்பட்டமையால் இன்று நாம் ஒவ்வொருவரும் வேதாகமத்தைப் பாவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

**சிந்திப்போம்**

***நீங்கள்***

- ★ ***தினமும் வேதாகமத்தை வாசிக்கின்றீர்களா?***
- ★ ***வேதாகமத்தைக் கற்று வருகின்றீர்களா?***
- ★ ***இறை செய்திக்கு ஏற்றவாறு வாழ்கின்றீர்களா?***
- ★ ***இறையன்பை உணர்கின்றீர்களா?***

செயற்பாடு

1. திருவிவிலிய மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் அவர்களது பணி உள்ளடங்கிய புத்தக பிரதி ஒன்றைத் தயாரியுங்கள்.
2. திருவிவிலியத்தில் நீங்கள் விரும்புகின்ற இறைவார்த்தைகளை ஆக்கபூர்வமாக முன்வையுங்கள்.

# 21.சக வாழ்வு வாழ்வோம்

**இலங்கை பல்சமய பல்லின மக்களைக் கொண்ட ஒரு நாடாகும். எமது நாட்டில் பல சமய பல்வேறு கலாசாரங்களை மதித்து வாழும் மக்கள் சமூகத்தினர் காணப்படுகின்றனர். அதனால் நாட்டில் சகவாழ்வு வாழ்வதற்கான ஏனைய மதங்களையும் அவற்றின் எழுத்தாக்கங்களையும் அறிந்து கொள்ளல் இப்பாடத்தில் எதிர் பார்க்கப்படுகின்றது.**

கிறிஸ்தவ பிள்ளைகளாகிய எமது புனித நூல் திருவிவிலியம் ஆகும். பௌத்த மதத்தவருக்கு திரிபீடகமும் இஸ்லாம் மதத்தவருக்கு குர் ஆனும் இந்து மதத்தவருக்கு வேத நூலும் முக்கியமானவைகள் ஆகும். அனைத்து மதங்களையும் அதற்கு உரித்தான எழுத்தாக்கங்களையும் மதித்து செயற்படுதல் கிறிஸ்தவ பிள்ளைகளிடையே காணப்பட வேண்டிய நற்பண்பாகும். அதேபோன்று அனைத்து மத நூல்களின் ஊடாக முன் வைக்கப்படும் மத போதனைகளின் சிறப்பை அறிந்து கொள்ளல் சமய சக வாழ்வுக்கு அவசியம் தேவைப்படுகின்றது.

பிற மத அறிஞர்களால் வெளியிடப்பட்ட மதச் செய்தி மற்றும் மதக் கோட்பாடுகளை அறிந்து கொள்வோம்.

பௌத்த நோக்கு மதக் கோட்பாடு



- பௌத்த மத நூல் திரிபீடகம்
- பௌத்த மத அடையாளம் தர்மசக்கரமாகும்
- பௌத்த மதம் ஒரு தத்துவக் கோட்பாடாகும்
- பௌத்த மதத்தின் அடிப்படைப் போதனை
  - துன்பம்
  - துன்பத்துக்கான காரணம்
  - துன்பத்தை நீக்குதல்
  - துன்பத்தை நீக்கும் வழி

பாளி மொழியில் திரிபீடகம் எழுதப்பட்டுள்ளது. அது,

- ♦ சூத்திரம்
- ♦ ஒழுக்கம்
- ♦ அபி தர்மம்

எனும் மூன்று பிரிவுகளை உடையது.

- ♦ தம்ம பதம் மற்றும் ஜாதகக் கதைகள் பௌத்த மதத்தவரின் முக்கிய இரு நூல்கள்.
- ♦ சமய விழாக்கள்: வெசாக் விழா, பொசன் விழா, போயா
- ♦ பௌத்த மத போதனையானது மனித வாழ்வில் விடுதலையைப் பெறுவதற்கு தாமாகவே முயற்சித்து அதனை அடைய வேண்டும் என்பதாகும்.

இந்து மதம்

- ♦ இந்து மதத்தவரின் பிரதான நூல்கள் வேதங்களும் ஆகமங்களும்
- ♦ இந்து மத அடையாளம் ஓம் எனும் வடமொழி அடையாளம்
- ♦ சிவன், விநாயகர், முருகன், அம்மன், விஷ்ணு போன்ற தெய் வங்களை வழிபடல்
- ♦ வேத நூலின் நான்கு பிரிவுகள்
  இருக்கு வேதம்
  யசுர் வேதம்
  சாம வேதம்
  அதர்வ வேதம்



- ♦ இவ் வேதங்கள் ஒவ்வொன்றும் மேலும் நான்கு பிரிவுகளாகப் பிரிக் கப்படும்
  ஸ்தோத்திரம்
  சங்கிதைகள்
  ஆரணியங்கள்
  உபநிடதங்கள்
- ♦ இந்துக்களின் சமயப் பண்டிகைகள் தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி
- ♦ இந்துக்களின் இறுதி நோக்கு இறைவனுடன் ஒன்றுபடுதல் ஆகும். பக்தர்களிடையே தூய்மை, ஆன்மீக ஒன்றிப்பு, உலகியலிலிருந்து விலகியிருத்தல், அஹிம்சை போன்றவற்றை வளர்ப்பதே இந்து மதத்தின் பிரதான நோக்கமாகும்.

இஸ்லாம் சமயம்

- ♦ இஸ்லாம் சமயத்தின் பிரதான நூல் அல் குர் ஆன்.
- ♦ ஒரே கடவுள் கொள்கை ( ஓரிறைக் கோட்பாடு)
- ♦ அல்லாஹ்வை வழிபடுவார்கள்.
- ♦ முகம்மது நபிக்கு அல்லாஹ் வழங்கிய போதனைகள் குர் ஆனில் காணப்படுகின்றன.
- ♦ முகம்மது நபி அவர்களின் போதனை 'அஸ் சுன்னாஹ்' என வழங்கப்படுகின்றது.
- ♦ இஸ்லாமிய பெருநாட்கள் ஷவ்வால், ஹஜ் ஆகிய ( நோன்புப் பெருநாள் ஹஜ்ஜுப் பெருநாள்) மாதங்களில் கொண்டாடப்படும்.
- ♦ மனித சமூகம் ஒரே குடும்பம் என்ற மனப்பான்மையில் பக்தர் வாழ்கின்றனர்.
- ♦ அல்லாஹ்வை மட்டும் விசுவாசித்து வாழ்ந்து சுவர்க்கத்தை அடையும் நம்பிக்கை உண்டு.



மேற்படி காரணிகளை நோக்கும்போது பல்வேறு மதங்களுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பினும் ஒன்றுபடும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அதனால் நல் சமூகத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியம். மதத்தின் ஊடாக வெளிப்படும் நற்பண்புகளை விளங்கி பிற மதத்தவருடன் சகோதரத்துவத்துடன் வாழவேண்டும்.

மேலும் அனைத்து மதங்கள் தொடர்பாக வித்தியாசமான விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. வித்தியாசமான நோக்கங்கள் வித்தியாசமான கலாசாரங்களைப் பின்பற்றி விழாக்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவ்வாறான வித்தியாசமான விழா நிகழ்வுகள், மத வேறுபாடுகள், என்பவற்றை இடையூறாகக் கருதாது செயற்பட வேண்டும். பாட சாலையில் அல்லது சமூகத்தில் ஏனைய மத விழாக்களில் கலந்து கொள் ளும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கும். எமது மத அடையாளங்களைப் பாதுகாத்து பிற மதங்களை மதித்து பிற மதத்தவருடன் சகவாழ்வில் ஈடுபடும் வண்ணம் அவற்றில் பங்குபற்றுதல் முக்கியம்.

**செயற்பாடு**

1. உங்களது வகுப்பில் பிற மத நண்பனுக்கு அல்லது நண்பிக்குக் கிறிஸ்தவ மதம் குறித்து நீங்கள் கூறும் விசேட காரணிகள் 5 எழுதுக.

2. பல்வேறு மத விழாக்களில் பங்களிப்பு வழங்கக் கூடிய மூன்று முறைகளை எழுதுக.